விடுதலைப்புலிகள்

குரல்: 26 | ஐப்பசி - கார்த்திகை 1991 | அன்பளிப்பு: 10/-

# விடுதலை கோரும் மக்களுக்கு உறுதியே வலுமிக்க ஆயுதம்

**-தலைவர் பிரபாகரன்**

"வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்" இவ்வாறு தலைவர் பிரபாகரன் மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ மக்களுக்கு விடுத்த செய்தியில் அறைகூவல் விடுத்தார்.

"களைத்துப் போனவனின் இறுதி ஆயுதமாக உணவுப் போர் எமது மக்கள் மீது தொடுக்கப்படலாம். பட்டினித் தீயால் மக்களின் மனவுறுதியை சுட்டெரிக்க எதிரி முயற்சிக்கலாம். ஆனால் சுதந்திரப் பசியில் உறுதிபூண்ட மக்களைச் சோற்றுப்பசி தீண்டிவிடப்போவதில்லை." என்று தலைவர் எடுத்துரைத்தார்.


"சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்கு பக்கபலமாக, மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்கமுடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன," என்று தலைவர் பிரபாகரன மாவ்ரர்களின் உறுதிப்பாட்டை கௌரவித்து செய்தி வெளியிட்டுள்ளார். அதன் விபரம் வருமாறு:

**அன்புக்கும், மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!**

இன்றைய தினத்தை மாவீரர் நாளாக, தியாகிகளின் திருநாளாக எமது தேசத்தின் - பெருநாளாக நாம் கொண்டாடுகின்றோம்.

எமது மண்ணுக்காக, எமது மக்களுக்காக, தமது இன்னுயிரை அர்ப்பணித்த தியாகிகளை, இன்று நாம் எமது இதயத்து ஆலயங்களில் நினைவு கூர்ந்து கௌரவிக்கின்றோம்.

ஒரு புனித இலட்சியத்திற்காக வாழ்ந்து, அந்த இலட்சியத்திற்காக போராடி, அந்த இலட்சியத்தை அடைவதற்காக தமது வாழ்வைத் தியாகம் செய்த இந்த மாவீரர்கள் மகத்துவமானவர்கள்.



இந்த மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை, அவர்களது தியாகங்கள், - அவர்கள் அநுபவித்த துன்ப துயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் இவை எல்லாவற்றினதும் ஒட்டு மொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது. எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால்,வியர்வையால் - கண்ணீரால் எழுதப்பட்டது.

எமது விடுதலை இயக்கம் மிகவும் நீண்ட, கடினமான, நெருக்கடிகள் நிறைந்த ஒரு வரலாற்றுப் பயணத்தை தொடர்ந்து வருகின்றது. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமுமே சந்தித்திராத சவால்களை, சோதனைகளை, எதிர்பாராத திருப்பங்களை இந்த வரலாற்று ஓட்டத்தில் நாம் எதிர் கொண்டோம்.

எமது போராட்டத்திற்கு எதிராக பல்வேறு விரோத சக்திகளும், துரோக சக்திகளும் இணைந்து செயற்பட்டன. எமது வரலாற்று எதிரியுடன் வலிமை மிகுந்த வல்லரசுகளும் எமக்கு எதிராக அணி சேர்ந்து கொண்டன. சதிகளாக, நாசச் செயல்களாக,நம்பிக்கைத் துரோகங்களாக, ஏமாற்றும் படலங்களாக எமதியக்கம் பல நெருக்கடிகளை எதிர் கொண்டது. அலைஅலையாக எழுந்த எதிரியின் படையெடுப்புக்களை ஒரு புறமும், அன்னிய இராணுவ ஆக்கிரமிப்பை மறு புறமாகவும் நாம் தனித்து நின்று எதிர் கொண்டோம். பல கட்டங்களில் எமது இயக்கம் அழிவின் விளிம்புக்குத் தள்ளப் பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு இராணுவத்தினர் எதிர்கொள்ளும் புதிய நெருக்கடி

கடந்த யூலைமாதம் 10ம் திகதி அதிகாலையிலிருந்து ஆகஸ்ட் 29ம் திகதி முன் இரவுவரை நடந்த ஆனையிறவுச் சமருக்குப்பின்னர், மீண்டும் இப்பொழுது ஆனையிறவு இராணுவத்தினர் இக்கட்டானதொரு நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

முன்னர் 800 இராணுவத்தினரைக் கொண்டிருந்த அத்தளம் இன்று 1500ற்கும் மேற்பட்ட படையினரைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இப்படை வீரர்களுக்குத் தேவையான உணவு - மருந்து - இராணுவ பொருட்கள் அத்தனையும் உலங்கு வானூர்திகள் மூலமே விநியோகிக்கப்படுகின்றன.

இவ்வான்வழி விநியோகம் சிறீலங்கா அரசுக்குப் பெருந் தொல்லைகளைக் கொடுக்கின்றது. தொடர்ந்தும் இவ்விதம் விநியோகங்களை மேற்கொள்ள இயலாது என்ற முடிவுக்கு அரசு வந்து விட்டது மாதாந்தம் கோடிக்கணக்கான ரூபா பணத்தை மேலதிக செலவாக இவ்விநியோக நடவடிக்கைக்குச் செலவழித்தும்கூட தளத்தினது தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது இராணுவம் திண்டாடுகின்றது.

ஆகவே ஏதாவது ஒருவழியில் தரைப்பாதையைத் திறந்து, அதற்கூடாக தளத்திற்குத் தேவையானவற்றை வழங்க சிறீலங்கா அரசு முயற்சிக்கின்றது.

இல்லாவிடின், ஆனையிறவுத் தளத்திலுள்ள இராணுவ வீரர்களது மனவுறுதி குறைந்து விடக்கூடும் என இராணுவ தலைமைப்பீடம் அஞ்சுகின்றது.

இந்த இக்கட்டிலிருந்து விடுபடுவதற்கு இராணுவத்தினருக்கு இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று, ஆனையிறவுத் தளத்திலுள்ள படையினரின் எண்ணிக்கையைக் குறைத்து தளத்தின் சுமையைக் குறைப்பது.

இவ்வழிமுறையை இராணுவ தலைமைப்பீடம் நடைமுறைப்படுத்த விரும்பாது. ஏனெனில் அது தளத்திற்கே ஆபத்தைக் கொடுத்துவிடும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

இரண்டாவது வழி:

ஏதாவது ஒரு தரைப்பாதையைத்திறந்து அதன் மூலம் தளத்திற்கு விநியோகங்களைச் செய்தல்.

சிங்கள அரசைப்பொறுத்தளவில் - கொள்கையளவில்- இதை ஏற்பதைத்தவிர வேறு வழியில்லை.

ஆனால் நடைமுறையைப் பொறுத்தளவில் இது செயற்படுத்தக் கடினமானதொன்றாகும். ஆனையிறவுத்தளத்துக்கு தரைவழிமூலம் விநியோகங்களை மேற்கொள்வதற்கு பிரதானமாக இரண்டு பாதைகளை குறிப்பிடலாம்.

ஒன்று, வவுனியா-யாழ்ப்பாணம் பிரதான

(12 ஆம் பக்கம் பார்க்க)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

## புலிகளின் குரல்

# உணவு நெருக்கடியும் புலிகளும்

சிறீலங்கா பேரினவாத அரசு தமிழீழ மக்கள் மீது நடாத்தி வரும் இனப்படுகொலைப் போரின் இன்னொரு பரிமாணம் தான் பொருளாதாரத் தடையாகும். தமிழீழத்தின் மீது கடந்த 16 மாதகாலமாக சிறீலங்காஅரசு இப் பொருளாதாரப் போரை நடாத்தி வருகின்றது.

குறிப்பாக அண்மையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் நோக்கங்களில் ஒன்று குடாநாட்டு மக்கள் மீது பொருளாதாரப் போரை மிக உச்ச நிலையில் பிரயோகிப்பதாகும். அந்த இராணுவ நடவடிக்கையின் விளைவாக பூநகரி கைப்பற்றப்பட்டு, கேரதீவு - சங்குப்பிட்டி பாதை தடுக்கப்பட்டுள்ளது. இதனால் குடாநாட்டு மக்களுக்குச் செல்லும் உணவு முற்றாகத் தடுக்கப்பட்டு விட்டது.

இந்த இராணுவ நடவடிக்கை மூலமும் குடாநாட்டின் மீதான பூரண பொருளாதாரத் தடை மூலமும் ஏற்படப் போகும் நெருக்கடிகளைப் பயன்படுத்தி சிறீலங்கா அரசு தனது அரசியல் அபிலாசைகளுள் மூன்றை நிறைவேற்ற விரும்புகின்றது.

முதலாவது புலிகளிடமிருந்து மக்களை அன்னியப் படுத்துதல்.

ஒரு புறத்தில் இராணுவ நெருக்கடிக்குள் மக்கள் சிக்குண்டிருக்கின்ற அதேவேளையில், மறுபுறம் உணவு-நெருக்கடியையும் அவர்கள் மீது திணித்து, மக்களைசொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாக்கி விடுவது. இவற்றினால் மக்கள் அல்லலுறுகின்ற அதே நேரத்தில் "அங்கே தாக்குகின்றோம் - இங்கே தாக்குகின்றோம்". "இத்தனை புலியைக் கொன்றோம். இத்தனையைப் பிடித்தோம்" என்றவாறாக பொய்ப்பிரச்சாரங்களில் ஈடுபடுவதுடன், எட்டப்பர்கள் மூலம் மக்களுக்குள் வதந்திகளையும் பரப்பி மக்களை நீண்ட குழப்பத்துக்குள் தள்ளிவிடுவது; இதன் மூலம் தமிழீழமக்களின் தேசிய விடுதலைப் படையாக நின்று போரிடுகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது அவர்களுக்கு நம்பிக்கையீனத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்துவது. அதன் மூலம் பரந்துபட்ட பொதுமக்களை புலிகளுக்கு எதிராகத்திருப்பிவிட்டு மக்களுக்கும், புலிகளுக்கும் இடையில் ஓர் அந்நியத் தன்மையை விதைத்துவிடுவது.

இரண்டாவதாக, தமிழீழம் பொருளாதார பலமில்லாத ஒரு நாடுஎன மக்களை எண்ண வைத்து அதன் மூலம் தமிழ் மக்களின் தனி அரசு அபிலாசையை சிதைத்தல்.

தனிஅரசுப் போரை நடாத்திக்கொண்டிருக்கின்ற தமிழீழ மக்களை நோக்கி, "நீங்கள் சிங்கள தேசத்தின் பொருளாதாரத்தில் நின்று கொண்டே வாழ்கின்றீர்கள், "தென் இலங்கைப்" பொருளாதாரம் இல்லையென்றால் அன்றாட வாழ்க்கையே பாதிக்கக்கூடிய பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் நீங்கள் சிக்குவீர்கள். தங்குநிலைப் பொருளாதார வாழ்வையே நீங்கள் கொண்டிருப்பதால் "தமிழீழத்தனியரசு" நடைமுறைச் சாத்தியமில்லாதஒரு கோட்பாடு..... என்றவாறு சொல்லாமல் சொல்லிக்காட்டி விடுதலை மீது எமது மக்கள் கொண்டுள்ள பற்றை - உறுதியை சிதைத்துவிடுவது.

மூன்றாவது; இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்தபடி புலிகளை பேச்சுக்கு அழைத்து தீர்வுகளை திணிப்பது.

எமது கட்டுப்பாட்டிலுள்ள சிலபகுதிகளின் மீது தனது பலத்தைத் திரட்டிக் குவித்து தொடற்சியானகூட்டுப்படை நடவடிக்கைகளை மேற்கொண்டு சில பகுதிகளைக் கைப்பற்றுவதன்மூலம் சிங்களப் படைகள் இராணுவ மேலாதிக்க நிலையை எட்ட முனைகின்றன. இதை உள்நாட்டு- வெளிநாட்டு ரீதியாக மிகைப்படுத்திப் பிரச்சாரப் படுத்துவதுடன் புலிகள் இயக்கத்தின் மீதும் ஒரு இராணுவ நெருக்குதலைப் பிரயோகித்து அதே வேளையில் பொருளாதார உணவு நெருக்கடிகளை மக்கள்மீதும்திணித்துவிடுவது.

இவ்வாறான ஒரு சிக்கல் நிறைந்த அரசியல் -இராணுவ சூழ்நிலையை புலிகள் மீது தள்ளிவிட்டு அவர்களை நிர்ப்பந்தித்து-பணியவைத்து தீர்வுகளைத் திணிப்பது ஆகும்.

அன்புக்குரிய எமது மக்கள் இந்த தந்திரோபாயங்களை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சிங்கள அரசானது, முழு இலங்கைத்தீவும் தனக்கே என்று சொந்தம் கொண்டாடி வருகின்றது. தமிழீழமக்களையும் தனது 'குடிமக்கள்' என்றே சொல்லிக்கொள்கின்றது.

இந்த நிலைப்பாட்டில் சிறீலங்கா அரசு இருக்கின்றவரையிலும் தமிழீழ மக்களுக்குரிய அனைத்துத் தேவைகளையும், வசதிகளையும் தடைசெய்யாதிருப்பது அதனது கடமையும் பொறுப்புமாகும்.

சர்வதேச அரங்கினது கண்ணோட்டமும் இவ்வாறானதாகவே இருக்கும்.

ஆகவே தமிழீழ மக்கள்மீது தானே திட்டமிட்டு ஏற்படுத்திய பொருளாதாரச் சிக்கலுக்கு - உணவு நெருக்கடிக்கு -தீர்வுகாண வேண்டியது சிறீலங்கா அரசின் கடமையாகும். அதாவது, சிறீலங்கா அரசைப் பிரதிநிதித்துவப் படுத்தியபடி இப்பகுதியில் இயங்கும் அரச இயந்திரம்தான் அத்தகைய தீர்வு ஒன்றை நடைமுறைப் படுத்தவேண்டும்.

உணவுத்தடை கடுமையாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் யாழ்ப்பாணத்தில் சிங்கள அரச நிருவாக இயந்திரத்தின் பொறுப்பாளராகச் செயற்படுபவர் அரச அதிபரேயாகும்.

இந்த வகையில் மக்களின் உணவுத்தேவையைத் தீர்க்க இராணுவ - அரசியல் தந்திரோபாயங்கள் கலக்காத தீர்வுத்திட்டம் ஒன்றை தயாரித்து செயல்வடிவம் கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசாங்க அதிபருக்கே உண்டு.

இச் சூழ்நிலையிலேயே உணவு நெருக்கடியின் தாக்கத்தை அரச அதிபருக்கு விளக்கி, பதில் நடவடிக்கை எடுக்கவேண்டியதில் அவருக்கிருக்கும் கடப்பாட்டையும் வலியுறுத்தி, இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'பங்கீட்டு உணவு விநியோக முறை' செயற்படுத்த அரச அதிபருக்கு உதவினோம்.

இதன்மூலம் பதுக்கல்களையும், கட்டுப்பாடற்ற விலை ஏற்றங்களையும் கொள்ளை இலாபங்களையும் தடுத்து, ஏற்பட இருந்த உணவு நெருக்கடியை தற்காலிகமாக தீர்த்து வைத்துள்ளோம். இதன் மூலம் செயற்கையாக நிகழ இருந்த பட்டினிச் சாவையும் தடுத்துள்ளோம்.

இத்திட்டமானது எல்லா மக்களுக்கும், குறிப்பாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு அல்லலுற்றுக் கொண்டிருந்த மக்களுக்கு பெரிய நிம்மதியைக் கொடுத்தது.

இதேசமயம் எமது மக்கள் இன்னொரு விடயத்திலும் தெளிவாக இருக்கவேண்டும்.

தற்போதய சூழலைப்போன்று நெருக்கடி நிலைகள் தோற்றம் காணுகின்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமது அன்றாடத் தேவைகள் எல்லாவற்றிற்கும் புலிகளையே எதிர்பார்க்கின்ற மனோநிலையொன்று எமது மக்களிடம் இருந்து வருகின்றது. இது தவறானதாகும்.

புலிகள் இயக்கம் தமிழீழ மக்களின் தேசிய விடுதலை அமைப்பு. எமது மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழ்வதற்கு ஒரு நாட்டை அமைக்கப் போராடிக்கொண்டிருக்கிறது. இன்று கணிசமான அளவு பகுதிகளை நாங்கள் மீட்டெடுத்து விட்டோம் என்பது உண்மை தான். ஆனால் ஒரு அரசை நிறுவி அதைச் செயற்படவைப்பதற்குரிய சூழல் இன்னமும் உருவாகவில்லை, அதைச் செய்தால்தான் நாம் மக்கள் நிருவாகத்தை முழுமையாகப் பொறுப்பெடுத்து, மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யமுடியும். எனவேதான் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும்கூட சிறீலங்கா அரசின் சிவில் நிர்வாகத்தை ஒரு எல்லைக்குள் இயங்க அனுமதித்திருக்கின்றோம். இவ்வாறான நெருக்கடி நிலைமைகளில் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியது அந்த அரச நிருவாக இயந்திரம்தான். இல்லாவிடின் அவர்கள்தான் பகிரங்கமாக மக்களுக்கும் பதில் சொல்ல வேண்டும்.

அன்புக்குரிய எமது மக்களே !

சாராம்சத்தில் ஒரு விடயத்தை நீங்கள் மிகத்தெளிவான முறையில் புரிந்துணர்ந்திருப்பீர்கள்.

சிங்களப் பேரினவாத அரசின் தமிழின அழிப்புக் கொள்கையின் கொடூர வெளிப்பாடுதான் இன்றைய உணவு நெருக்கடி. இனப்படுகொலையை செய்து முடிப்பதற்கான இன்னொரு ஆயுதமாக உணவை ஆக்கியிருக்கின்றது.

இந்த உணவு நெருக்கடி, அழுத்தம் திருத்தமாக எமக்கு ஒரு வரலாற்றுப்பாடத்தைக் கற்பித்து நிற்கின்றது. சிறீலங்காவைச் சார்ந்திருக்கின்ற பொருளாதாரவாழ்வு எவ்வளவு ஆபத்தானது என்பதை தெளிவாக உணர்த்தியிருக்கின்றது.

இந்த உணவு நெருக்கடி உணர்த்தியுள்ள யதார்த்த உண்மையை ஏற்றுக்கொண்டு பொருளாதார வாழ்வில் குறிப்பாக உணவில் தங்குநிலையற்ற வாழ்வைவாழ எமது மக்களின் பலங்களையும், எமது மண்ணின் வளங்களையும் அறிவியல் பூர்வமாகப்பயன்படுத்துவோம். தங்குநிலையற்ற தமிழீழத்தை அமைப்பதற்கான அத்திவாரத்தை இடுவோம்.

# உற்பத்திப் போர்முனை

## -- உழவு மாடுகளின் பயன்பாடு --

எமது தேச விடுதலைப் போராட்டம் அதி உயர் வடிவத்தைப் பெற்றபோது எம்மீது இடப்பட்ட பொருளாதாரத்தடை என்ற அழுத்தம் — எம்மை தனியான தேசம் ஒன்றிற்குரிய பொருளாதார கட்டுமானத்தை வரையறுக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது.

தமிழீழத்தின் வடபகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதார தடையின் கருத்துருவம், அப்பிரதேசத்தினுள் உணவுப் பொருட்கள் உட்பட மனித வாழ்வுக்கு அவசியமான பொருட்களை செல்லவிடாமல் தடுத்தலும் அதே நேரம், அங்கு எதுவிதமான உற்பத்தி நடவடிக்கைகளும் நடைபெறாமல் தடுத்தலுமாகும்.

இதன் காரணமாக, விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான விதை தானியவகைகளும், கிருமி நாசினிகளும், உரவகைகளும். எரிபொருளும் தமிழீழ பகுதியினுள் வருவது தடுக்கப்பட்டது.

இவை ஒவ்வொன்றுக்கு எதிராகவும் தனித் தனியான அணுகு முறைகளை மேற்கொண்டு அதற்குரிய மாற்று நடவடிக்கைகளை எடுத்து உற்பத்தி நடவடிக்கையில் நாம் கணிசமானளவு வளர்ச்சியைக் கண்டோம்.

இக்கட்டுரையானது — எரிபொருள் சக்திக்கு மாற்றாக கால்நடை உழைப்பு சக்தியை வளர்ப்பதற்கான ஒரு செயல் வடிவத்தை வெளிப்படுத்துகின்றது.

1990 ஆம் ஆண்டுக்குரிய காலபோக நெற்செய்கை உண்மையில் எமக்கு ஓர் பெரும் படிப்பினையைத் தந்தது.

அதாவது — அக்காலத்தில் ஏற்பட்ட எரிபொருள் தடையால் விவசாயிகள் உழவு இயந்திரத்தை பாவிக்க முடியவில்லை. மாறாக, அவ்வேளையில் கைவசமிருந்த குறைந்தளவு உழவு மாடுகளைக் கொண்டே அவர்கள் வயல்களை உழவு செய்தார்கள்.

இதனால், ஒரு மாத காலத்திற்குள் உழவு செய்து விதைப்பு முடிய வேண்டிய நிலை மாறி உழவிற்கும், விதைப்பிற்கும் 2 – 2½ மாதங்கள் எடுத்தது.

இதன் விளைவுகள் பெரும் பாதிப்பைத் தந்தன. அதாவது காலம் பிந்திய விதைப்பால் பெரும் போகம், இடைப் போகத்திற்குரிய காலத்தையும் பிடித்துக் கொண்டது. அது மட்டுமல்லாமல் பிந்திய விதைப்பால் குளத்து நீர் காலபோக நெற்செய்கைக்கும் பயன் படுத்தப்பட்டது; இதனால் ஏற்பட்ட நீர்த் தட்டுப்பாட்டினால் சிறுபோக நெற்செய்கை செய்கை பண்ணப்படும் பெருமளவு நிலப்பரப்புகள் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டன. அதே நேரம் காலம் பிந்திய விதைப்பால் வானம் பார்த்த வயல்கள் (மழையை நம்பி செய்கை பண்ணப்படும் வயல்கள்) பெரிதும் அழிந்தன. இதன் இன்னொரு பாதிப்பாக நோய்த் தாக்கத்தினால் உற்பத்தி பெரிதும் குறைந்தது.

இதே நேரம் நெற்செய்கை தவிர்ந்த ஏனைய விவசாய (பயிர்ச்செய்கை) நடவடிக்கைகளும் இத்தகைய காரணிகளால் பெருமளவில் வீழ்ச்சியடைந்தன.

இத்தகைய உற்பத்தி வீழ்ச்சியும் - அனுபவங்களும் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளில் உடனடியான கவனத்தை எடுத்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலையை எமக்கு ஏற்படுத்தியது. இது தொடர்பாக எமது இயக்கத்தின் துணை அமைப்புகளில் ஒன்றான ஆய்வு நிறுவனம் உடனடி நடவடிக்கைகளை எடுத்தது.

வட தமிழீழத்தின் முக்கிய உற்பத்தி நிலப்பரப்பானது. மணலாறு - வன்னிப் பிராந்தியங்களிலேயே உள்ளது. இந் நிலப்பரப்புகளே இப்பகுதிக்கான உணவுத் தேவையின் பெரும் பகுதியை நிவர்த்தி செய்கின்றன.

விவசாயத்தைப் பொறுத்தவரை எரிபொருளின் பெரும் பயன்பாடு நிலத்தைப் பண்படுத்துவதற்காகவே இருந்தது.

சில பத்து வருடங்களுக்கு முன்பு எங்கள் வயற்பரப்புகளில் இயந்திரங்களைப் பார்த்திருக்க முடியாது. விவசாயிகள் உழவு மாடுகளைப் பயன்படுத்தியே நிலத்தைப் பண்படுத்தி வந்தனர். இந்த நிலைமை சில விவசாயக்கிராமங்களில் தொடர்ந்து நடைமுறையில் இருந்தே வந்துள்ளன. நவீன விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு அமைவாகவும், வேலைச் சுலபத்திற்காகவும், சமூகத்தேவையின் நிமித்தம் விரைவான உற்பத்திக்காகவும் அண்மைக் காலங்களில் இயந்திரங்கள் வயல்களில் இறங்கின.



இதில் குறிப்பிடக் கூடியது என்னவெனில் உற்பத்திச் செலவிற்கும், வருமான அதிகரிப்பிற்குமான விகிதத்தில் இந் நடவடிக்கை பெரிதான மாற்றத்தைக் கொண்டுவரவில்லை.

விவசாயியின் வருமானம் அதிகரித்த அதே நேரம், உற்பத்திச் செலவும் மிக அதிகமானது.

சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடையின் விளைவாக எரிபொருளை பெறமுடியாத நிலையில் உழவு இயந்திரங்களின் பாவனை நின்றது. இது எம்மைப் பொறுத்த வரைக்கும் நல்ல விளைவையே தந்தது.



## மக்களோடு புலிகள்

இது தொடர்பாக வன்னிப் பிராந்திய ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ரகு (எம். ஜி. ஆர்.) அவர்கள் குறிப்பிடுகையில்,

''உழவுயந்திரத்தின் தேவையை எமது சொந்த வளத்தால் மாற்றீடு செய்ய நாம் உத்தேசித்தோம். அதற்கு வன்னிப் பிராந்தியங்களின் இன்னொரு பெரும் வளமான காளை மாடுகளை பயன்படுத்த எண்ணினோம்'' என்றார்.

> ''உழவுயந்திரத்தின் தேவையை எமது சொந்த வளத்தால் மாற்றீடு செய்ய நாம் உத்தேசித்தோம், அதற்கு வன்னிப் பிராந்தியங்களின் இன்னொரு பெரும்வளமான காளைமாடுகளை பயன்படுத்த எண்ணினோம்'
>
> வன்னிப் பிராந்திய ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர்
> **திரு. ரகு (எம்.ஜி.ஆர்)**

வன்னிப் பிராந்தியத்திலுள்ள மொத்தப் பயிர்ச் செய்கை நிலத்தின் விஸ்தீரணம் 1,97, 780 ஏக்கர்களாகும், இவை மாவட்டரீதியாக, வவுனியா 77, 870 ஏக்கரும் கிளிநொச்சி 62, 650 ஏக்கரும் மணலாறு — முல்லைத்தீவு 57, 260 ஏக்கரும் ஆகும்.

மொத்த நிலப்பரப்பாகிய 1,97,780 ஏக்கர் நிலத்தையும் 1½ மாதத்திற்குள் உழவு செய்ய வேண்டுமானால் 35,161 சோடி உழவு மாடுகள் தேவைப்படும். ஆனால், உழவு இயந்திரத்தைப் பெரும்பான்மையான விவசாயிகள் பாவித்து வந்தமையால் உழவு மாடுகள் மிகமிகக் குறைவாகவே விவசாயிகளிடம் இருக்கின்றன.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் உழவு இயந்திரத்திற்குப்பதிலாக தேவைப்படும் உழவு மாடுகளை எவ்வளவு விரைவிலும் எவ்வளவு கூடுதலாகவும் அறிமுகப்படுத்த முடியுமோ அவ்வளவு கூடுதலாகவும், விரைவாகவும், அறிமுகப்படுத்தினால் மட்டுமே தமிழீழத்தில் - உணவுப் பற்றாக்குறையை ஏற்படாமல் தடுக்க முடியும் என்ற முடிவுடன் காளைமாடுகளை உழவுக்குப் பழக்கும் திட்டம் ஆய்வு நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டது.

முதற் கட்டமாக 4000 சோடி காளை மாடுகளை உழவிற்குப்பழக்குவதென திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி கொள்வனவு செய்யப்படும் காளைமாடுகள் உழவிற்குப் பழக்கிய பின்பு அவை விவசாயிகளுக்கு விற்கப்படும். இங்கு பெறப்படும் பணம் சுழற்சி முறையில் இத்திட்டத்திற்குப்பயன்படுத்தப்படும்.

இதன்படி 1991 ஆம் ஆண்டு ஆடி, ஆவணி மாதங்களில் 200 சோடி காளைமாடுகளை உழவிற்குப் பழக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயற்படுத்தப் பட்டு வருகிறது.

**நல் விளைவுகள்.**

1. இத் திட்டத்தின் பயனாக, உழவு இயந்திரம் - உதிரிப்பாகங்கள், எரிபொருள் ஆகியவற்றின் கொள்வனவுக்காகச் செலவிடப்படும் பல கோடி பணம் எமது பிரதேசத்திற்கு வெளியில் செல்வது தவிர்க்கப்படுகிறது. பணத்தின் சுழற்சி தமிழீழத்திலேயே நிலவுகின்றது.

2. கூலி விவசாயிகள் அதிகமாக தொழில் வாய்ப்பைப் பெறுகிறார்கள். இதன் மூலம் அவர்களின் குடும்ப வாழ்க்கை நிலை மேம்படுகிறது.

3. இதுவரை காலமும் வெறும் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த எமது தேசிய வளங்களில் ஒன்றான காளை மாடுகளின் பெறுமானம் உயர்ந்துள்ளது. இந்த விலை அதிகரிப்பின் பயனை விவசாயிகளான கால்நடை உரிமையாளர்களே பெறுவர்.

4. உழவு மாடுகளிற்குத் திடீரென ஏற்பட்ட வரவேற்பை அவதானித்த தனிப்பட்ட விவசாயிகள் நிலைமையை உணர்ந்து கொண்டு தாமாகவே காளைமாடுகளை உழவிற்குப் பழக்குவதற்குத் தொடங்கினார்கள். இதன் மூலம் தேசத்தின் தேவையை உணர்ந்து - தன்னம்பிக்கையுடன் எமது விவசாயிகள் உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள் என்பது தெளிவாகிறது

1991 ஆம் ஆண்டு புரட்டாதி - ஐப்பசி மாதங்களிலே வன்னிப் பகுதிகளிலுள்ள வயல்கள் யாவும் உழவு மாடுகளின் மூலமே உழப்பட்டதை அவதானிக்க முடிந்தது. மிக விரைவில் இந் நிலப்பகுதிகளுக்குத் தேவையான உழவு மாடுகளின் தேவை நிவர்த்தியாகி விடும் என நாம் நினைக்கின்றோம்.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரின் கடுமையான உழைப்பும், எமது மக்களினது உற்சாகமான பங்களிப்பும் - முயற்சியும் இத்துறையில் உழவுமாடுகளின் கணிசமானளவு தேவையை நிவர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையை எமக்குத் தருகிறது'

★ எரிபொருள் தடை நடைமுறையில்லாத வேளையில் நல்லினகாளை ஒரு சோடியும். நாட்டினகாளை ஒரு சோடியும் என்ன விலையிலிருந்ததென்றும் காலப்போக்கில் அதன் கேள்வி விலை எவ்வாறு அதிகரித்துச் சென்றுள்ளது என்பதையும் கீழே உள்ள அட்டவணை விளக்குகின்றது.

| இனம் | எரிபொருள் தடைக்கு முன் 1 சோடி காளை மாட்டின் விலை | எரிபொருள் தடைக்கு பின் 1990 ஆம் ஆண்டு காலபோக விலை | 1991 காலபோக விலை |
|---|---|---|---|
| நாட்டினம் | 2500 / 5000 ரூபா | 5000 / 12,000 ரூபா | 10,000 / 20,000 |
| நல்லினம் | 5000 / 10,000 '' | 15.000 / 25,000 '' | 25,000 / 60,000 |

# கடலில்கலந்த கவிதை.... டேவிட்



## ஒரு போராளியின் குருதிச்சுவடுகள்

## லெப். கேணல் டேவிட்

**கிறிஸ்தோபர் அன்ரனி மரியதாஸ்**

பலாலிக்குடியேற்றம், பொலிகண்டி

*29.01.1966 - 09.06.1991*

தமிழீழத்தின் திசைகளில் மோதும் காற்றில் கலந்து விட்ட தென்றல்.

விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு பரிமாணங்களையும் தன்காலத்திலேயே நேரடியாகக் கண்ட மிகச் சில போராளிகளில் ஒருவன்.

தமிழீழத்தின் விடுதலைப் போராட்டம், எல்லாக் காலங்களிலும், கடல் பிரயாணங்களை முதன்மைப்படுத்துவதாகவே அமைந்தது. எத்திசையும் கடலால் சூழப்பட்ட எம் தாயகத்தின், தாக்கமுள்ள நகர்வுகள் கடல்மூலமே மேற்கொள்ளப்பட்டன. எமது விடுதலைப் போராட்டத்தில், கடல் பயணங்கள் பிடித்திருந்த இடத்தின், அதே அளவு இடத்தை, எமது கடல் சரித்திரத்தில் டேவிட் பிடித்திருந்தான்.

அவனது இளமையிலேயே கடல் அவனை அழைத்தது. அவனது குடும்பநிலை அவனை கடலுக்கு அனுப்பியது.

''இயக்கம் கடலிலும் பிரயாணம் செய்ய வேண்டிவரும்'' என்றகாலம் போய், ''இயக்கத்தின் பிரயாணம் கடலில்தான்'' என்று வந்துவிட்ட 83-ல், இயக்கத்திற்காய் கடலில் இறங்கினான்.

தமிழீழத்தின் ஒவ்வொரு கரையிலும் கால் பதித்தான். நீண்ட பெரும் கடற்பரப்பு, கடற்பரப்பில் புள்ளியாய் நகரும்படகு. படகினைப் போல் பலமடங்கு விரிந்து, எழுந்து, விழுங்க வரும் அலைகள். சமுத்திர ராட்சதனின் அலைவாய் மூடமுதல், விரைந்து, தத்திப்பாய்ந்து, வெளியேறி, திரும்பிப்பார்க்கும் லாவகம். திரும்பியபார்வை நேரே நோக்க அடுத்த பெரும் அலை.

படகினை பல்மடங்கு வேகத்துடன் துரத்தி, தீ உமிழும் பீரங்கிவாய்கள். அவற்றின் பல்முக நகர்வுகளிலும் தப்பி, தத்திச் செல்லும் வேகம், பின்னால் வரும் எதிரியின் கை அதிகமாய் நெருங்கின், நின்று - நிதானித்து இயந்திரத்துப்பாக்கியை இயக்க ஆணையிடும் உறுதி. அந்தக் கணத்தில் எதிரி அடையும் அதிர்ச்சி டேவிட்டை பல தடவைகள் கரை சேர்த்துள்ளது.

அவனது கடல்பயணங்கள் மெய்சிலிர்க்கும் பல அனுபவங்களைக் கொண்டது. அவனது ஆசான்களும், நல்ல நண்பர்களும் கடலிலேயே கலந்து விட்டனர். அப்போதெல்லாம் கூட, அவன் கடலில் நிலைத்துநின்றான். அவனது தப்பியோடும் லாவகமும், தேவையின் போது எதிர்த்து நின்று எதிர்கொள்ளும் நெஞ்சுறுதியுமே அவனை நிற்க வைத்தது.

இன்று இயக்கத்தின்வசமுள்ள பெருமளவு ஆயுதங்களுக்கு டேவிட்டை தெரியும்,

ஆம்! அவை எமது கைகளுக்கு கிடைப்பதற்கிடையில் டேவிட் இருந்திருப்பான்.

அநேகமாக எப்போதுமே நாம் கரையில் காணும் டேவிட்டைக் கடலில் சந்திக்கமுடியாது. ஒருங்கிணைந்த சிந்தையுடன், தன்னை நம்பி படகில் ஏறிய ''நீந்தத் தெரியாத சுமைகளுக்கு'' உத்தரவிடும் டேவிட், கடுமையான வசைகளால் ஓட்டிமாரை கட்டுப்படுத்தும் மாலுமி. கடலில் டேவிட்டை, டேவிட்டாகப்பார்ப்பது கடினம்,

எப்போதாவது மிகஅபூர்வமாக,சீரான, நேவியல்லாத, ஒதுக்குப்புறக்கடலில், நல்ல நிலவும் சேர்ந்தால் அவனது படகு நிற்கும். இயந்திரச் சத்தத்தை மேவி அவன் குரல் ஒலிக்கும். ''கடல்மேல் பிறக்கவைத்தான்...'' அவனது குரல் இனிய சங்கீதம் இல்லைத்தான், ஆனாலும அவன் பாடினால் நின்று, நிதானித்துக் கேட்கவைக்கும் வசீகரம். அந்த வசீகரம் அவனது குரலுக்கா? அல்லது அவன் பாடும் பாடல்களுக்கா?

அவனது குரலில்; பாடல் கம்பீரம் பெறுவது தெரியும். அந்தக்குரலுக்கு, அவன் தெரிவு செய்யும் பாடல்களைவிட, வேறுபாடல் எடுபடாதென்பதும் புரியும்.

அவனைத் தெரிந்த, அவனுடன் பழகாத எல்லோராலும் கூறப்படும், எண்ணப்படும், எண்ண வடிவங்களுக்கு அப்பாற்பட்ட போராளி. அநேக போராளிகளைப் போல் அவனுக்கும் ''பழஞ்சோறு குழைத்துக் கையிலே கொடுக்கும் அம்மா'' ''ஆமியின் வெடி கேட்டும் சிறுபற்றை சரசரக்காமல் தேத்தண்ணிச் செம்புடன் அண்ணனை. அண்ணனின் தோழர்களை தேடும் தங்கைகள்''. வீட்டின் நிலையை எண்ணுவதா? நாடா? என்ற கேள்விக்கு எப்போதுமே குழப்பமில்லாத பதிலைத் தன்வசம் வைத்திருந்த போராளி. மிக நெருக்கமான நண்பர்களிடம் மட்டும் ''தங்கச்சியவை'' என்று கூறிக் கண் கலங்கும் அண்ணன்.

எப்பேற்பட்ட வேலையாக இருந்தாலும் அவ் வேலையின் முக்கியத்துவம் விளங்கவைக்கப்பட்டால், அந்த வேலையை செய்து முடிக்கும் வரை அவன் ஓய்வது அபூர்வம். அவனது நினைவுகள் மீட்டப்படும் போது திரும்பத்திரும்ப அவனது அக்குணநலனே எவருக்கும் முன்நிற்கும்.

தமிழீழத்தின் கடற்பரப்பில் மட்டுமல்ல, தமிழீழத்தின் தரைப்போர் வாழ்க்கையிலும் அவன் சாதித்தவை அதிகம். அதிலும் வடமராட்சியில் நடைபெற்ற அநேகமான சண்டைகளில் அவனது சுவடுகள் பதிந்திருந்தன.

இந்திய இராணுவத்திற்கு முந்தையபோர் வாழ்வில், ஒப்பிரேசன் லிபரேசனுக்கு முன்பும் பின்பும் வடமராட்சியில் அவன்பங்கு அதிகம். ஒப்பிரேசன் லிபரேசனுக்கென ஆமி புறப்பட்டதிலிருந்து, நெல்லியடி முகாமுக்குள் மில்லர் புகுந்ததுவரை அவன் ஓயவில்லை.

இந்திய இராணுவ யுத்தம் ஆரம்பித்த காலத்தில் தமிழ் நாட்டில் தங்கியிருந்தவன். யுத்தம் ஆரம்பித்து, கொழுந்துவிட்ட நேரத்தில் தள்ளியிருக்கமுடியாமல், ஒரு கட்டுமரத்தில் வந்து சேர்ந்தான். இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் வடமராட்சியில் இயக்கத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருந்ததில், அவன் பங்கு மிகப் பெரியது.

அனேகமாக இயக்கத்தின் எல்லாத் துறைகளிலும் தனது முத்திரை பதித்தவன். அரசியல்? அவன் அரசியல் வித்தகன் இல்லைத்தான் எனினும், தான் ஏந்திய துப்பாக்கி எதற்காக என்பதில் குழப்பமில்லாதவன். மக்களுடன் பழகும் போதினில் அந்தமக்களில் ஒருவனாக நின்று சிந்திக்கத் தெரிந்தவன்.

எல்லாத் தலைமறைவுக்கால வாழ்க்கையிலும், மக்களால் பாதுகாக்கப்பட்டவன் டேவிட் நின்றால் ஆமி பார்த்துச் சொல்வதற்கென ஒரு முதியோர் படையே திரளும்.

அவன் உலவும் ஊர்களில் சிறுகுழந்தைக்கும் அறிமுகமாகிவிடும் முகராசி. சிறுவர்களை ஒருதடவை சந்தித்தால், மறுதடவை சந்திக்கும் போது அவர்களை பெயர் சொல்லி அழைக்கும் நட்புணர்வு அல்லது அவர்கள் வெட்கத்தில் முகம் சிவக்க இவன் ஒரு பெயர் வைத்திருப்பான். சிறுவர்கள் என்றல்ல எவருடனுமே நட்பைப் பேணுவதில் தனித்துவமானவன், பழையநண்பர்களை மீண்டும் சந்திப்பதில் தனியான ஆர்வமுள்ளவன்.

எப்போதோ ஒருமுறை ''வண்டி விட்ட கரையில்'' லாம்பு வெளிச்சத்தில் சாப்பாடு கொடுத்தவரை யாழ்ப்பாணத்தில் கண்டு ''என்னைத் தெரியேல்லையே, சுளுவன்கேணியில றால் கறியோடை புட்டுச்சாப்பிட்டனாங்கள் எல்லே'' என்று கேட்டு அசத்துவான்.

பழைய நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்தால், மறந்துவிட்ட, திருப்பக் கிடைக்காத, நினைவுகளை மீட்டுவது டேவிட்தான். இவனது நட்பைப் பேணும் பண்பால் பலராலும் விரும்பப்பட்டவன். சிலவேளைகளில் வேலை நேரங்களிலும் ''நட்பைப் பேணப்போய்'' வாங்கிக்கட்டிக் கொண்டு தலையைச் சொறிவான்.



இயக்கம் மிக அரிதாகச் சந்தித்த ''எல்லா வேலைகளிலும் வல்லுனர்களாக விளங்கக்கூடிய'' சிலரில் டேவிட் ஒருவன். ஆனால் கடல் என்பது 'பெரிய கடலாக' இருந்தது. அதில் இயக்கத்தின் கடற்பிரிவு மிகச்சிறியதாக இருந்ததால் அவனால் கடலை விட்டுவிட்டு வரமுடியவில்லை. அவனது குறைந்த பாடசாலைக் கல்வியின் போதும்கூட பெரிய திட்டமிடல் திறன் இருந்தது. அதுபுரிந்தவர்கள் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

அவனது எதிர்பார்ப்புகளுக்கெல்லாம் அவனுக்கு களம் கிடைக்கவில்லை. கடல் அவனை மறித்துவைத்திருந்தது.

ஒரு மிக முக்கிய கடற்பயணம், தேவை பெரியது, டேவிட் தேவையான ஒழுங்குகளை வழமைபோல் சரிபார்க்கிறான். கடல் தெரிந்தவர்கள் கடலில் ஓடத்தயங்கும் காலநிலை, ஆனாலும் பிரயாணம் அவசியமானதாகவும், ஒத்திவைக்க முடியாததாகவும் இருந்தது.

கடலைத் தவிர எல்லாமே வழமைபோலத்தான். வழமையான தடபுடல், வேகமான பிக்கப்......, பெரிய நம்பிக்கை விதையை நெஞ்சில் விதைத்துவிட்டு டேவிட் ஆயத்தமாகிறான். வழமையாக ஓடித்திரியும் நேவியையும் காணவில்லை. எல்லாமே நம்பிக்கையுடன் இருக்கிறது. வண்டி புறப்படும், அதுவும் டேவிட் நேரில் புறப்படும் காரணம் சொல்லப்படாவிட்டாலும்; வழமைபோலவே ஊகித்துக் கொண்டு வழியனுப்புகிறார்கள். டேவிட்டை அன்புடன் வளர்த்துப் பாதுகாத்த மக்கள் — அவனுடன் மிக அன்பாகப் பழகியவர்களில் நல்லாய்க் கடல் தெரிந்தவர்கள் அன்று கரைக்கு வரவில்லை—

படகு நீரில் இறங்குகிறது ''குழந்தைப் பிள்ளையை கையிலேபிடித்துக் கூட்டிச்செல்லும் வாஞ்சையுடன்'' இரு கரையிலும் ஆட்கள் வரிசையாய் நின்று, படகினை கடலுள் இழுத்துச்செல்கிறார்கள். இடுப்பளவு தண்ணீரில் இறங்கியபின்னர், அணியத்தில் நின்ற அரி தடியால் ஊன்ற படகு தள்ளாடி, நகர, அண்ணாந்து நின்ற இஞ்சின்வால்கள் தண்ணீரில் குளிக்க, எல்லாம் வழமைபோலவே.

''நல்லாய் சேவிஸ்போட்ட இஞ்சின் ஒரு இழுவையில் ஸ்ராட் வர'', இருட்டில் நின்ற தோழர்களும், மக்களும் வண்டியில் நிற்பவர்களுக்கு ''தெரியாது என்று தெரிந்தும்'', கையை உயர்த்தி மெல்ல அசைக்கிறார்கள். வண்டியில் நின்றவர்களும் கையசைத்திருப்பார்கள்......?

ஒரு இஞ்சினில் கொஞ்சத்தூரம் ஓடிப் போய்நின்று தயாராகையில், ''துணியில் பொத்தி ரோச்லைட் அடிப்பது'' தெரிகிறது.

அல்பா, அல்பா......

என்னமாதிரி?

பிரச்சினையில்லை, குதிரைக்கு சாப்பாடு கொடுக்கினம்......

கரிகாலனின் பதில் வோக்கியில் கேட்கிறது.

பின் ஒவ்வொரு இஞ்சினாக சத்தமிட படகு நகராமலே இஞ்சின் சத்தம் அதிகரித்து குறைந்து, மிக அதிகரித்து, தணிவது கேட்கிறது.

படகு வழமைபோல் வலப்புறமாய் வட்ட, மிட்டு, நிழலாய்நகர்கிறது. ''எப்போதும்போல், 'தேவையும் கடலும் தவிர' மற்ற எல்லாம் வழமைபோல்''

நீரைக்கிழித்து, வெண்நுரை கிளம்ப, அலையில் எழும்பிப்பாய்ந்து..... படகு புறப்பட்டுவிட்டது. அதிகரித்த சத்தமும், கரையில் கூடிய கூட்டமும், சிறிது சிறிதாய் மறைய, கடல் தெரியாதவர்களின் திருப்திப் பெருமூச்சுடன், கடலைத் தெரிந்தவர்களின் கனத்த பெருமூச்சு'' கலந்தபோது, ''வண்டி வெளிக்கிட்டு விட்டது.''

இஞ்சின் சத்தம் கரைவதற்கு முன்னரே, கரையிலுள்ள வோக்கி,

அல்பா...... அல்பா...... என அழைத்தது.

''தண்ணியடிக்குதுதானே வோக்கியை அது 'தான் லொக் ரிலூப்பிலை வைத்திட்டினம் போல'' எனக் கூறிவிட்டு, முயற்சியை கைவிடும் போதும் கூட, இஞ்சின் சத்தம் கேட்டுக்கொண்டு தானிருக்கிறது.

நேரம் கரைய, முகாமுக்குத் திரும்ப நினைக்கும் வேளையில், தூரத்து முகாம் வோக்கியில் ஒரு அவசர அழைப்பு. ''வோக்கியில் அல்பா தொடர்பெடுத்தது......''

(9ம் பக்கம் பார்க்க)

# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்பட வேண்டும்.

**வீரமரணமடையும் புலிவீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப்படமாட்டாது. அவைகள் புதைக்கப்படவேண்டும் என நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும் பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.**

**மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட "மாவீரர் துயிலும் இல்லங்களில்" இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக்கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.**

**இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலைபெறும்.**

**மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம்? என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.**

இதுவரைகாலமும் வீரமரணமடைந்த எமது போராளிகளின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மதசபிரதாயங்களின் அடிப்படையில் உடல்கள் புதைக்கப்படுவதோ, தகனம் செய்டப்படுவதோ நடந்துவந்தது.

ஆனால், இனிமேல் வீரமரணமடையும் அனைத்துப் புலிவீரர்களின் உடல்களையும் புதைப்பது என்ற முடிவுக்கு நாங்கள் வந்துள்ளோம். புதைக்கப்பட்ட இடத்தில் அவ்வப் போராளிகளின் பெயர் கூறும் கல்லறைகள் எழுப்பப்பட்டு அவை தேசிய நினைவுச்சின்னங்களாகப்பாது காக்கப்படும். இவைகள் காலங்காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டே இருக்கும்.

தாங்கள் வீரமரணமடைந்தால் தங்களுடைய உடல்களை "மாவீரர்துயிலும் இல்லங்களில்" புதைத்து அங்கே நினைவுக்கற்கள் நாட்டப்படவேண்டும் என்பதே போராளிகளின் விருப்பமாகும்.

இந்தவிருப்பம் மிகஅண்மையில் ஏற்பட்டதொன்றல்ல. இந்திய - புலிகள் போர்க்காலத்தில் வன்னிக்காட்டுக்குள்ளேயே போராளிகளின் இவ்விருப்பங்கள் வெளிப்படத் தொடங்கிவிட்டன.

பிரதானமாக, தலைவர் பிரபாகரன் அவர்கள் தங்கியிருந்த மணலாற்றுக்காட்டுக்குள்ளேயே இவ்விருப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டதுடன் செயல்வடிவங்களும் கொடுக்கப்பட்டது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக கடும் சமர்கள் நடந்தஇடம் மணலாறு என்பது தெரிந்ததே. இந்தியப்படைகளுடனான போரில் நாம் சந்தித்த வெற்றிக்கு அத்திவாரமாக இருந்தது மணலாற்றுக்காட்டில் நாம் கண்ட வெற்றிதான்.

இந்தச் சமர்களில் எமது போராளிகள் பெற்ற வெற்றிக்கு மணலாறுக்காடு உறுதுணையாக இருந்தது. இதனால் தங்களுடைய போராட்டவாழ்வில் ஒன்றறக்கலந்து - உறுதுணையாக இருந்த அந்த நிலத்திலேயே தங்களது உடல்களும் புதைக்கப்படவேண்டும் என போராளிகள் விரும்பினார்கள்.

மணலாற்றுக் காட்டுக்குள் தங்கியிருந்து போராடிய போராளிகள் பலர் தாங்கள் எங்கே சென்று போராடி வீரமரணமடைந்தாலும் தங்களது உடல்கள் மணலாற்றுக் காட்டுக்குள்தான் புதைக்கப்படவேண்டும் என எழுத்து மூலம், வாய்மூலம் தலைவர் பிரபாகரனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதன்படியே அவர்களது விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டுவந்தன.

இதன்காரணமாக இன்று, மணலாற்றுக் காட்டுக்குள் பெரியதொரு "மாவீரர் துயிலும் இல்லம்" போராட்டக்கதைகளைக் கூறிக்கொண்டே இருக்கின்றது. இதேபோன்று மற்றைய மாவட்டங்களிலும் சிறிய - சிறிய அளவுகளில் காடுகளுக்குள் போராளிகளின் கல்லறைகள்காணப்படுகின்றன.

இவ்விதம் தங்களது உடல்கள் சொந்தமண்ணுடன் கலக்கப்படவேண்டும் என்ற போராளிகளது மனவிருப்பத்தையும் அதன் பின்னால் இருந்த ஆத்மதிருப்தியையும் பார்த்தோம். இனி போராளிகளது உடல்களை தகனம் செய்வதற்கும், புதைப்பதற்கும் இடையில் இருக்கும் மானிட உணர்வுகளையும், அதன் பிரதிபலிப்புக்களையும் மனோவியல் ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் பார்ப்போம். அப்போது பாரிய உண்மைகளை நாம் கண்டு கொள்ளலாம்.

மரபுவழியாக தமிழர்களிடம் இருந்துவரும் சம்பிரதாயங்களின்படி இறந்தவர்களை தகனம் செய்வதே வழமை என அறிந்துவைத்திருக்கின்றோம். இதற்கு விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாதகமான வாதங்கள் வைக்கப்படுவது நாம் அறிந்ததுதான். ஆனால் அந்த வாதத்தை இம்மண்ணின் விடுதலைக்காகப் போராடி வீரமரணமடைந்த போராளிகள் விடயத்தில் ஒப்புநோக்க முடியாது.

**போராளிகள் தனிமனிதர்கள் அல்ல, அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள் அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றைப் படைக்கும் சிருஸ்டிகர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்க வேண்டும். இந்தத் தியாகச் சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வையூட்டிக் கொண்டே இருக்கும்.**

அதாவது, போராளிகளின்கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச்சுடரை ஏற்ற உதவும் நெருப்புக்கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான் போராளிகளது உடல்களைப் புதைத்து கல்லறைகளை எழுப்பி அதை என்றென்றும் உயிர்த்துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

இன்றுவரை 3750 ற்கும் மேற்பட்ட புலிவீரர்கள் வீரமரணமடைந்து விட்டனர். இவர்களது உயிர்த் தியாகத்தால் எமது விடுதலைப் போராட்டம் உயர்ந்ததொரு கட்டத்திற்கு நகர்த்தப்பட்டுவிட்டது. ஆனால், இவர்களது நினைவை உயிர்த்துடிப்புள்ளதாக்கும் சின்னங்கள் எம்மிடம் உண்டா? எனக்கேட்டால் "இல்லை" என்றுதான் பதில் கிடைக்கும்.

இது ஒரு புறமிருக்க, எமது சகதோழர்கள் சிலரது வீரமரணத்தின்பின் நடைபெறும் சிலசம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ, உடன்பிறந்தவர்களோ, உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச் சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழநின்று தகனநிகழ்ச்சிகளை நடாத்தினாலும் கூட அப்போராளியைப் பெற்றெடுத்து - சீராட்டி வளர்த்த தாய் - தந்தையரோ, அல்லது உடன் பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாது விட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக் காட்டப்போகின்றோம்?

ஒன்றன்பின் ஒன்றாய் நூற்றுக்கணக்கான போராளிகளைத் தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப் போகின்றோம்?

அப்படியான சூழலில் அவர்கள்படும் துயரையும், அங்கலாய்ப்பையும் அனுபவவாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

இப்போராளிகள் அனைவருக்கும் அவர்கள் பெயர் கூறும் கல்லறைகள் கட்டப்பட்டால் அவற்றைக்கண்ணுறும் அனைத்து மக்களும் சுதந்திரத்தின் பெறுமதியைப் புரிந்து கொள்வதுடன் அதை வென்றெடுக்க போராளிகள் கொடுத்த உயிர்விலையையும் உணர்வு பூர்வமாக தெரிந்து கொள்வார்கள்.

அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாயம் சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றது என நீங்கள் கருதலாம் ஆனால் உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச் சொத்தாக, பொக்கிசமாக இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும், எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம்மண்ணில் இருந்து கொண்டேயிருக்க வேண்டும்.

எனவேதான் தனதுபிள்ளையின் உடலைப்பார்க்காது விட்டாலும் கூட அவனது உடல் புதைக்கப்பட்டகல்லறையைப் பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவி செய்வோம். அத்துடன் அடிக்கடி அக் கல்லறைக்குச் சென்று அவனது நினைவுகளை மீட்டுப்பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

கல்லறைகளை அமைத்து அடிக்கடி அங்கே செல்வது சோகத்தை தொடர்ந்தும் மனங்களில் வைத்திருப்பதற்காகவா? என ஒரு கேள்வி எழலாம்

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானது தான். ஆனால் அந்தச் சோகத்தை மறக்க வேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்கமுயற்சிப்பதாக இருக்கமுடியாது தானே!

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை, உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா? என யாராவது வினா எழுப்பலாம்

நீண்டகாலம்தொட்டுஇருந்துவரும் தகனம் செய்வது தமிழரின் பண்பாடு என எண்ணுவதுதவறானது. உண்மையில் பண்டைய தமிழர் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புறநானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்கப் போதுமானது.

ஆனாலும் இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும், உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொதுமக்களிற்கல்ல. எனவே இங்கே பண்பாட்டுப் பிரச்சனை எழநியாயமில்லை. அத்துடன் புதைப்பது என்ற முடிவானது வெறும்இறுதிக் கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திரத் தியாகத்தின் சின்னம்.

சரி அப்படி புதைத்து எழுப்பப்பட்ட கல்லறைகளை இராணுவம் அழிக்காதா?

அப்படி நடந்தால் வீரமரணமடைந்த போராளிகள் அவமதிக்கப்பட்டது போலாகாதா?

எனவே இந்த அவமதிப்புக்கு புலிகளே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கலாமா? எனவும் கேள்வி எழலாம்.

தியாகி சிவகுமாரனுக்கு உரும்பராயில் அமைக்கப்பட்ட சிலையையும் மன்னார் தளபதி லெப். கேணல் விக்டரது கல்லறையையும் சிங்களபடைகள் சிதைத்ததையும் மனதில் வைத்து மேற்குறித்த கேள்விகள் எழுவது நியாயமானது.

போரில் கொல்லப்பட்ட எதிரி இராணுவ வீரனது கல்லறைக்கு மரியாதை

**போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திரச்சுடரை ஏற்ற உதவும் நெருப்புக்கிடங்குகளாகும்.**

(18ம் பக்கம் பார்க்க)

# இரண்டு தசாப்தங்களும் -

## 3

ஆயுதப் பயிற்சித் திட்டத்தை இந்திய மண்ணில் செயற்படுத்திக்கொண்டு, கொழும்பில் பேச்சுவார்த்தை நாடகம் ஒன்றையும் பாரத அரசு அரங்கேற்றியது. செத்துப்போயிருந்த கூட்டணித் தலைமைக்குப் புத்துயிர் கொடுத்து, சர்வகட்சி மாநாட்டில் தமிழரின் பிரதிநிதிகளாக அவர்களை மேடையேற்றியது. ஒருபுறம் தமிழ் இளைஞர்களைக் கூலிப்படைகளாகக் களத்தில் இறக்கி ஜே. ஆர். அரசுக்கு இராணுவ நெருக்குதலைக் கொடுத்து மறுபுறம, கூட்டணியைத் தமிழர்களின் பிரதிநிதிகளாகப் பாவித்து, ஒற்றையாட்சியின் கீழ் அற்பசொற்ப சலுகைகளுடன் ஒரு தீர்வைக் கொண்டுவர இந்திய அரசு முயன்றது. அரசியல் பாலைவனத்தில் ஒதுங்கிப் போயிருந்த கூட்டணித் தலைவர்களுக்கு இந்தக் கதாபாத்திரம் மிகவும் பொருத்தமாக அமைந்தது. எனவே, இந்திய இயக்குனர்கள் சொன்னபடி நடிப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தனர். எனினும் குறைந்தபட்ச சலுகைகளைத்தானும் கொடுக்க ஜே. ஆர். அரசு மறுத்ததால் 1983 இன் இறுதியில் ஆரம்பித்த சர்வகட்சி மாநாடு சிறிது காலம் இழுபட்டு பின்னர் தோல்வியில் முடிந்தது.

1984 ஆம் ஆண்டு, தமிழீழம் பரவலாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் அதிதீவிரமடைந்தது. தொடர்ச்சியாகவும், தீர்க்கமாகவும் பலமுனைகளில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித்தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கில் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல பொலிஸ் நிலையங்கள் தாக்கி அழிக்கப்பட்டன. இதனால் வடக்கில் பொலிஸ் நிர்வாகசேவை சீர்குலைந்தது. மிகவும் நுட்பமான முறையில் புலிகளால் தயாரிக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகள் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதத்தை விளைவித்தது. இதனால் கொதிப்படைந்த இராணுவம் அப்பாவிப் பொதுமக்களைப் பழிவாங்கியது. திருக்கோணமலை, வவுனியா மாவட்டங்களில் பல கிராமியப் படுகொலைகள் இடம்பெற்றன. மக்களைக்கொன்றுவிட்டுத் தப்பிவிட முடியாது என்ற வகையில் புலிகளின் பதிலடித் தாக்குதல்கள் அமைந்தன. சிங்கள ஆயுதப் படைகளை நேருக்கு நேர் நின்று சமர்புரியும் அளவிற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பாரிய வளர்ச்சி பெற்று வருவதைக் கண்டு சிங்கள அரசு திகிலடைந்தது. புலிகளின் போராட்ட சாதனைகளைக் கண்டு தமிழீழ மக்கள் பூரிப்படைந்தனர். தமிழரின் விடுதலைப் போராட்டம் முழுமையான ஆயுதப் போர் வடிவம்பெற்று வருவதை மக்கள் புரிந்துகொள்ளத்தவறவில்லை.

### திம்புவில் பேச்சுவார்த்தை

புயலின் வேகத்துடன் புலிகளின் ஆயுதப்போராட்டம் உக்கிரமடைவதைக் கண்டு இந்திய அரசு கலக்கமடைந்தது. சிங்கள இராணுவ இயந்திரம் சிதைக்கப்பட்டு தமிழரின் ஆயுத எதிர்ப்பியக்கம் வெற்றிப்பாதையில் விறுநடைபோட்டால் தனியரசு சாத்தியமாகும் சூழ்நிலை பிறந்துவிடுமென இந்தியா அஞ்சியது. போட்ட அழுத்தம் போதும், இனிப்போர் நிறுத்தம் செய்து, பேச்சுக்களை நடாத்தி, பிரச்சினையைத் தீர்ப்போம் என இந்திய அரசு, 1985 இன் ஆரம்பத்திலிருந்தே, புலிகள் இயக்கம் மீது அழுத்தத்தைப் போட்டது. இந்தியாவின் வற்புறுத்தலின் பேரில் 1985 யூன் 18 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள ஆயுதப்படைகளுக்கும் மத்தியில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து யூலை முதற்பகுதியில் இந்திய அரசின் மத்தியத்துவத்தின் கீழ் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுக்கள் ஆரம்பித்தன. கூட்டணி உட்பட சகல தமிழ் அமைப்புகளும் பேச்சுகளில் கலந்துகொண்டன. தமிழரின் தன்னாட்சி உரிமையை வலியுறுத்தி புலிகள் இயக்கம் திம்புப் பேச்சுக்களில் நான்கு கோட்பாடுகளை முன்வைத்தது. இந்தக் கோட்பாடுகளை ஏனைய அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டு தன்னாட்சி உரிமைக்கோரிக்கையில் ஒரே நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டது இந்திய அரசுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து தமிழீழமக்களின்தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கவேண்டும் என்ற விடுதலைப் புலிகளதும் மற்றைய தமிழ் அமைப்புகளதும் ஏகோபித்த கோரிக்கையை சிங்கள அரசு நிராகரித்தது. இப்படியாக திம்புப் பேச்சுவார்த்தைகள் சிக்கலடைந்த நேரத்தில் வவுனியாவில் சிங்கள இராணுவம் போர்நிறுத்தத்தை மீறி 200க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை கொன்றுகுவித்தது. இதனைக் கடுமையாக ஆட்சேபித்து புலிகளும், ஏனைய அமைப்புகளும் திம்புப் பேச்சுக்களை பகிஷ்கரிக்க முடிவெடுத்தன. இந்திய அரசு பேச்சுக்களைத் தொடரவைக்கப் பகீரத முயற்சிசெய்தும் திம்புப்பேச்சுக்கள்முறிவடைந்தன. பேச்சுக்கள்முறிவடைந்ததைத் தொடர்ந்து தமிழீழத்தில் விடுதலைப் போர் உக்கிரமடைந்தது. விடுதலைப் புலிகள் தொடர்ந்து வீரசாதனைகள் புரிந்தனர்.



தலைவர் பிரபாகரனின் சொந்த முயற்சியாலும், செயற்திறனாலும், இன்றுதமிழீழமக்களின் பாதுகாப்பு அரணாக, ஒரு பலம் வாய்ந்த விடுதலை இராணுவம் உருவாக்கப்பட்டிருக்கிறது. போர்த்திறனிலும், இலட்சிய உறுதியிலும், தியாக சிந்தையிலும் ஈடிணையற்றதாகத் திகழும் புலிகளின், தன்னாட்சி உரிமைப் போராட்டம், தென் ஆசியாவின் முதன்மை பெற்ற தேசிய விடுதலைப் போராட்டமாக உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

### இந்திய - சிறீலங்கா சூழ்ச்சி வலைக்குள் தமிழ்க் குழுக்கள்

தன்னாட்சி உரிமைப் பிரச்சினையில் தமிழமைப்புக்கள் புலிகளோடு ஒன்றுசேர்ந்து ஒரே குரலெழுப்பியதும், திம்புப் பேச்சுக்கள் முறிந்ததும், தொடர்ந்தும் புலிகள் இயக்கம் ஆயுதப்போரில் முன்னணிப் படையாக நின்று சிங்கள இராணுவத்தின் முதுகெலும்பை முறித்துவருவதும் இந்திய அரசுக்கு சினத்தைக்கொடுத்தது. தமிழ் அமைப்புகள் மத்தியில் ஒற்றுமையைக் குலைத்து, மோதல்களை உண்டுபண்ணி, புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, கடுகெதியில் முன்னேறிச் செல்லும் ஆயுதப் போராட்டத்தை கட்டுப்படுத்த இந்திய அரசு சதி செய்தது. டெலோ, ஈ. பி. ஆர். எல். எப் இயக்கங்களுக்கு நவீன ஆயுதங்களை வழங்கி புலிகளை மோதி அழிக்கத் தூண்டிவிட்டது. இதற்கிடையில் சிங்கள அரசு புளொட் தலைமையுடன் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி புலிகளை அழிக்கும் இன்னொரு சதியில் ஈடுபட்டது. இப்படியாக, தமிழ்க் குழுக்கள் இந்திய,சிங்கள அரசுகளின் சூத்திரதார சூழ்ச்சி வலைக்குள் சிக்குப்பட்டு புலிகளுடன் மோதுவதற்குத் துணிந்தன. தேசிய விடுதலைப் போராட்டத்திலோ, அன்றித் தமிழீழ மக்களின் நலனிலோ எவ்வித அக்கறையும் காட்டாது முற்றுமுழுதாக, சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இந்த ஆயுதக் குழுக்கள், இந்திய ஏகாதிபத்தியத்தினதும், சிங்கள பேரினவாதத்தினதும் சூழ்ச்சிக்குப் பலியாகி, தமிழரின் விடிவுக்காக இரத்தம் சிந்திக் கொண்டிருந்த புலிகள் இயக்கத்தை அழிக்க முற்பட்டபோது புலிகளும் தற்காப்பு யுத்தத்தில் குதிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1986 மே மாதம் டெலோ இயக்கத்துடனும் நவம்பர் மாதம் ஈ. பி. ஆர். எல். எவ்வுடனும் மோதல்கள் நிகழ்ந்து இவ்விரு இயக்கங்களும் விடுதலைப் புலிகளால் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டனர். புளொட் இயக்கம் தடை செய்யப்பட்டு அவர்களது செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. எட்டப்பர் கோஷ்டிகளுக்கு எதிராக புலிகள் ஈட்டிய வெற்றி தமிழீழ சுதந்திரச் சுடரை அணைந்து போகாமல் பாதுகாத்தது. இந்தியாவின் கூலிகளாக மட்டுமன்றி மக்கள் விரோத சக்திகளாகவும் செயற்பட்ட இந்த அமைப்புக்கள் செயலிழந்து போக தமிழீழத்தில் தலைவிரித்தாடிய அராஜகமும் நின்று போயிற்று.

எதிரி அமைப்புக்களின் பகை முரண்பாடுகள் நீங்கியதால் தமிழீழத்தில் புலிகள் இயக்கத்தின் மேலாதிக்கம் வளர்ந்தது. சிங்கள இராணுவத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டம் என்றுமில்லாத முனைப்புடன் முன்னேற்றம் கண்டது. பலமுனைகளில் வெடித்த புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சிங்கள இராணுவம் முகாமுக்குள் முடங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடும்,வடக்கின் பெரும் பகுதிகளும் விடுதலைப் புலிகளின் பெரும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக மாறின. சிங்கள அரசு தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டது.

### இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீடு

தனது சதித்திட்டங்கள் எல்லாம் தவிடு பொடியாகி, புலிகள் இயக்கத்தின் மேலாதிக்கம் மேலோங்கி வந்தமை இந்திய அரசுக்குத் திகைப்பைக் கொடுத்தது சிங்கள இராணுவத்தின் ஆதிக்கம் உடைக்கப்பட்டு தமிழீழ மண் படிப்படியாக புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து கொண்டிருப்பதையும் இந்திய அரசால் ஜீரணிக்க முடியவில்லை. நான்கு ஆண்டு காலமாக நடாத்திய அரசியல், ராஜதந்திர சுழியோட்டங்களினாலும், சூழ்ச்சிகளாலும் எவ்வித பயனும் இட்டவில்லை என்பதை உணர்ந்துகொண்ட பாரதம் நேரடி இராணுவத் தலையீடுதான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தது. புலிகளின் ஆயுதப் போராட்ட நெருக்குதலால் ஆட்டம் கண்டிருக்கும் சிங்களக் கிழட்டு நரி, இந்திய இராணுவத் தலையீட்டை எதிர்க்காது என்றும் புதுடில்லி கணிப்பிட்டது. இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை அழித்துவிடும், தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிடும், சிங்கள இராணுவத்தைப் பலிகொடாமல் இந்தச் சாதனையைச் சாதித்து விடலாம் என நப்பாசை கொண்ட ஜெயவர்த்தனா இந்திய ஆதிக்கத்திற்கு அடிபணிய முடிவு செய்தார். 1987 யூலை 29 ஆம் திகதி ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இந்தியாவின் பூகோள நலன்களையே பிரதான நோக்காகக் கொண்ட இந்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்க, ரஷ்ய வல்லரசுகளின் ஆசீர்வாதமும் கிடைத்தது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ராஜதந்திர வெற்றி என இந்தியப் பாராளுமன்றமும், இந்திய பத்திரிகை உலகமும் ஒப்பந்தத்தைப் புகழ்ந்தன. கூட்டணி தொடக்கம் தமிழ் அமைப்புக்கள் எல்லாமே ஒப்பந்தத்திற்குப் புகழாரம் சூட்டின தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் ஒப்பந்தத்தை எதிர்த்தனர். தமிழ் மக்களின் நலனுக்காக, தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்காக, தமிழ் மக்களின் கௌரவத்திற்காக இந்திய வல்லரசுடன் முரண்பட்டு நிற்கத் துணிந்தது.

### இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கெதிராக புலிகள் போர்

இந்திய - இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியின் விளைவாக இந்தியப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தம் வெடித்தது. ஆயுதக்களைவு என்ற போர்வையில் இந்திய அமைதிப்படை புலிகளுக்கு எதிராக யுத்தத்தில் இறங்கியது. இந்த யுத்தம் தமிழீழ மக்களுக்கு எதிரான போராக விஸ்வரூபம் பெற்றது.

1987 அக்டோபர் 10 ஆந் திகதி ஆரம்பமான இந்திய - புலிகள் யுத்தம் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீடித்தது. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்களை களத்தில் இறக்கி புலிகளை அழித்துவிட இந்திய அரசு பகீரத முயற்சிகளை எடுத்தது. புலிகளை ஆதரித்து நின்ற அப்பாவித் தமிழ் மக்களையும் இந்திய அரசு பழிவாங்கியது. இந்திய இராணுவத்தின் அசுரத்தனத்திற்கு ஆறாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் பலியானார்கள்.

# புலிகளும்

**இரண்டு தசாப்தங்களும் புலிகளும்**
*என்ற தலைப்பில் முத்தமிழ் விழா மலரில் (1991) திரு. அன்ரன் பாலசிங்கம் எழுதிய கட்டுரையை இங்கு மறுபிரசுரம் செய்கிறோம்.*

தமிழீழம் முழுவதையும் முற்றுகையிட்டு நின்ற ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் ஆக்ரோசத்துடன் சமர்புரிந்தனர். அலை அலையாக எழுந்த படையெடுப்புகளை எல்லாம் மலைபோன்ற உறுதியுடன் எதிர்த்துப் போராடினர். விடுதலைப்புலிகளின் அலாதியான துணிவும், அசைக்க முடியாத தன்னம்பிக்கையும் இந்திய இராணுவத்தைத் திகைக்க வைத்தது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களை உயிர்ப்பலி கொடுத்தும் புலிகளை வெற்றி கொள்ள முடியாது போகவே இந்திய இராணுவத்தின் மனவுறுதி தளர்ந்தது. இந்திய வரலாற்றிலேயே என்றுமே சந்தித்திராத நீண்ட, கடினமான ஒரு யுத்தத்தில் குதித்து, பெரிய உயிர்ச்சேதத்தைச் சந்தித்தும் தனது இராணுவ கேந்திர இலக்குகளை அடைய முடியாமல் இந்திய அரசு திணறியது.

**பரந்துபட்ட பொதுமக்களை சாதிய, வர்க்க பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரே இலட்சியத்தில் ஒன்றுபடுத்தி, ஒரே தேசிய சக்தியாகக் கட்டியெழுப்பிய சாதனை புலிகளையே சாரும்.**

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள முடியாதபோது அரசியல் ரீதியில் அந்நியப்படுத்திவிடலாம் என்ற நோக்கத்தில் போலியான ஒரு மாகாணசபைத் தேர்தலை அரங்கேற்றித் தனது கூலிகளை இந்திய அரசு பதவியில் ஏற்றியது. அப்படியிருந்தும் மக்களின் ஆதரவு இல்லாததால் மாகாணசபை நிர்வாகம் செயற்படவில்லை.

ஒட்டுமொத்தத்தில், இந்தியத் தலையீடு தமிழீழத்தில் தோல்வியைச் சந்தித்தது. ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் செயலிழந்து செத்துப் போனது. எனினும் இந்திய இராணுவம் தொடர்ந்தும் தமிழீழத்தில் நிலைகொண்டிருந்தது.

## சிறீலங்கா - புலிகள் பேச்சுக்களும், இந்தியப்படை வெளியேற்றமும்

புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற பிரேமதாசா, 1989 இன் ஆரம்பத்திலிருந்தே விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்கு வருமாறு மாறி, மாறி அழைப்புகளை விடுத்தார். வடகிழக்கில் முடிவில்லாமல் தொடரும் யுத்தமும், தென்னிலங்கையில் ஜே.வி.பி யின் கிளர்ச்சியுமாக வன்முறைச் சவால்கள் இலங்கைத்தீவு முழுவதிலும் பரவியிருந்தது. புலிகளுக்கு எதிரான யுத்தத்தை சாக்காக வைத்து வடகிழக்கில் இந்திய இராணுவம் நிரந்தரமாக நிலை கொண்டுவிடலாம் என பிரேமதாசா அஞ்சினார். ஜே. வி. பி யினரும் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான கோஷத்தை முன்வைத்தே கிளர்ச்சியை நடாத்தி வந்தார்கள். எனவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்தி இந்திய இராணுவத்தை வெளியேற்றிவிட வேண்டுமென பிரேமதாசா விரும்பினார். தமிழீழ மண்ணில் இந்திய ஆக்கிரமிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும் என புலிகளும் விரும்பியதால் பிரேமதாசாவின் அழைப்பை ஏற்க முடிவு செய்தனர். நிபந்தனைகள் எதுவுமின்றி பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்றன. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக பிரேமதாசா அரசு புலிகளுடன் கைகோர்த்து நின்றமை ராஜீவ் அரசுக்கு சினத்தைக் கொடுத்தது. சிங்கள இராணுவத்திற்கு மூண்டு கொடுத்து, சிறிலங்கா அரசின் நலனுக்காக, இந்திய ஜவான்கள் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் வேளையில் பிரேமதாசா அரசு புலிகளை அரவணைத்து நிற்பது இந்தியாவுக்கு அவமானத்தையும், ஆத்திரத்தையும் கொடுத்தது. புலிகளின் விவேகமான ராஜதந்திர காய்நகர்த்தலால் இந்திய - இலங்கை உறவுகளில் பகைமை மூண்டது. இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு பிரேமதாசா பகிரங்கமாக அறிவித்தார். இலங்கையின் அழைப்பின்பேரில் அமைதி காக்க வந்ததாகக் கூறிவந்த இந்திய அரசுக்கு நிலைமை சங்கடமாகியது. அவமானப்பட்டு முகத்தில் கரி பூசியபடி இந்திய இராணுவம் தமிழீழத்திலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது.

எத்தனையோ திட்டங்கள் வகுத்து, எத்தனையோ அரசியல் ராஜதந்திர நாடகங்களை அரங்கேற்றி, எத்தனையோ கோடி பணத்தைச் செலவழித்து, எத்தனையோ ஜவான்களின் உயிரைப் பலி கொடுத்து, இறுதியில் வெறும் கையுடன் எதிர்பார்த்தது கைகூடாமல், அவமானப்பட்டு வெளியேறுவதை இந்தியாவினால் சகித்துக் கொள்ளமுடியவில்லை.

## இந்திய இராணுவ தலையீட்டின் படுதோல்வி

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டபோது சோவியத்யூனியன் கையாண்ட யுக்தியை இந்தியா கடைப்பிடிக்க முனைந்தது. புலிகளிடமிருந்து தனது பொம்மை ஆட்சியைக் காப்பாற்றும் நோக்கில் ஒரு கூலி இராணுவத்தை உருவாக்க இந்தியா முயன்றது. 'தமிழ்த் தேசிய இராணுவம்' என்ற பெயரில் இந்த இராணுவம் அமைக்கப்பட்டது. பலவந்தமாக தமிழ் இளைஞர்களையும், மாணவர்களையும் வேட்டையாடிப் பிடித்தது. பயிற்சி அளித்து, பெருந்தொகையில் நவீன ரக ஆயுதங்களை வழங்கி, புலிகளுக்கு எதிராக ஒரு படை திரட்டப்பட்டது. பெருமாளின் மாகாணசபை நிர்வாகத்திற்குப் பாதுகாப்பு அரணாக இந்தப் படையை உருவாக்கிவிட்டு, இந்திய இராணுவம் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் படிப்படியாக வெளியேறியது.

இந்திய இராணுவம் வெளியேறிய பிரதேசங்கள் துரித கெதியில் புலிகள் வசம் வீழ்ந்தன. இலட்சிய உறுதியும், போர் அனுபவமும், வீரமும் மிகுந்த புலிப்படை வீரரின் மின்னல் வேகத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 'தமிழ்த் தேசிய இராணுவம்' சிதறுண்டு ஓடியது. பெரும்பான்மையானோர் ஆயுதங்களுடன் சரணடைந்தனர். மாகாணசபை கவிழ்ந்தது. பெருமாளும் அவரது சகாக்களும் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்திய அரசின் இறுதித் திட்டமும் தவிடு பொடியாகியது.

எண்பதுகளின் இறுதி ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெளியேற்றத்துடனும் 'தமிழ்த் தேசிய இராணுவத்தின்' வீழ்ச்சியுடனும் முடிவடைந்தது. இந்திய இராணுவத் தலையீடு தோல்வியில் முடிந்ததால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எழுந்த மிகப் பெரிய ஆபத்து நீங்கியது. இந்திய வல்லாதிக்கம் விடுத்த பெரியதொரு சவாலை புலிகள் இயக்கம் வெற்றி கொண்டது. ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனத்தின் நியாய பூர்வமான விடுதலைப் போராட்டத்தில் அநியாயமாகத் தலையிட்டதன் கசப்பான வரலாற்றுப் பாடத்தை இந்திய அரசு கற்றுக் கொண்டது. இந்திய இராணுவ பூதத்தைத் தனித்துநின்று எதிர்த்து வெற்றி கொண்டதால் உலகத்தின் தனிச்சிறந்த போராட்ட சக்தியாக புலிகள் இயக்கம் புகழைத் தேடிக்கொண்டது.



*1990 இல் வீரமரணமடைந்த, புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறைப் பிராந்திய துணைத் தளபதி லெப். கேணல் றீகன்*

## பேச்சுக்களில் சிக்கலும், தமிழீழ சிறீலங்காப் போரும்

இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து கொழும்புப் பேச்சுக்களில் சிக்கல் எழுந்தது. பிரேமதாசா அரசின் போக்கிலும், அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட்டது. இந்திய வல்லாதிக்க ஊடுருவலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதோடு ஜே.வி.பி இயக்கமும் அழிக்கப்பட்டதால் திமிர்கொண்ட பிரேமதாசா அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதுவும் வைக்காமல் தட்டிக் கழிக்க முற்பட்டது. தமிழரின் தன்னாதிக்க உரிமைக்கு தடைவிதித்த அரசியலமைப்பின் ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்கிவிடவேண்டுமென புலிகள் விடுத்த கோரிக்கையையும் அரசு அசட்டைசெய்துவந்தது. அதே சமயம், எந்தத் தீர்வுக்கும் முன்நிபந்தனையாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென அழுத்தங்களும் போடப்பட்டன. இதனால் அரசுக்கும், புலிகளுக்கும் முரண்பாடு எழுந்தது.

**அற்புதமான தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் நிறைந்த புலிகளின் போராட்டம் தமிழர் மத்தியில் என்றுமில்லாதவாறு தேசாபிமான உணர்வையும், விடுதலைப்பற்றையும் ஊட்டியிருக்கிறது.**

ஜே. வி. பி இயக்கம் என்ற போர்வையில் ஐம்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிச் சிங்கள இளைஞர்களைக் கொன்றுகுவித்த சிங்கள ஆயுதப்படைகள் புலிகளையும் அழித்துவிடலாமெனக் கர்வங்கொண்டது. தமிழீழத்தில் முகாம்களுக்குள் முடங்கிக்கிடந்த சிங்கள இராணுவத்திற்கு வரிப்புலிகள் கம்பீரமாக பவனி வருவதையும், புலிக்கொடிகள் எங்கும் வானுயரப் பறப்பதையும் காணச் சகித்துக்கொள்ள முடியவில்லை. கிழக்கில் சிங்களப் பொலிஸாரின் அட்டகாசங்களும், வடக்கில் இராணுவத்தினரின் அத்துமீறல்களும் மோதல்களாக உருவெடுத்து இறுதியில் யுத்தமாக வெடித்தது.

தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில் வரலாறுகாணாத மாபெரும் மோதலாக வெடித்திருக்கும் முழு அளவிலான யுத்தத்துடன் தொண்ணூறுகளின் புதிய தசாப்தம் ஆரம்பமாகியது.

பல வரலாற்றுத் திருப்புமுனைகளையும், யுக நிகழ்வுகளையும் கொண்டதாக அமைந்த கடந்த இரு தசாப்தங்களின் சரித்திரம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் படிமுறை வளர்ச்சியோடும், எழுச்சியோடும், போராட்டத்தோடும் இழையோடி நிற்பதைப் பார்த்தோம். இந்த வரலாற்று ஓட்டத்தில் புலிகள் இயக்கம் தமிழரின் சுதந்திர எழுச்சியின் புரட்சிவடிவமாக வளர்ச்சிகண்டதோடு, விடுதலைப் போராட்டத்தையும் தீர்க்கமான பாதையில் முன்னடையச் செய்தது.

எமது தேசிய வாழ்வுக்கு அடித்தளமானதும், சுதந்திர தனியரசுக்கு அத்திவாரமானதுமான எமது தாயக மண்ணை மீட்டெடுக்கும் முயற்சியில் புலிகள் இயக்கம் மாபெரும் சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறது. தொடர்ச்சியான, திண்ணியமான, வீரம் செறிந்த போராட்டத்தின் பயனாக இன்று தமிழீழத்தின் பெரும் பகுதி நிலப்பரப்பு புலிகளால் மீட்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலமாக அந்நிய இராணுவங்களின் ஆக்கிரமிப்புக் களமாக இருந்து வந்த இந்தப் பகுதிகள் இன்று தமிழரின் நிர்வாகக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மாற்றப்பட்டிருப்பது எமது போராட்டத்தின் பெரியதொரு முன்னடைவாகவே கருதப்படவேண்டும்.

பிரபாகரனின் சொந்த முயற்சியாலும், செயற்திறனாலும் இன்று தமிழீழ மக்களின் பாதுகாப்பு அரணாக ஒரு பலம் வாய்ந்த விடுதலை இராணுவம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மரபுவழி யுத்த முறைகளில் கைதேர்ந்ததாக தமிழர் படை ஒன்று அமைக்கப்பட்டிருப்பது எமது போராட்ட வரலாற்றில் வளர்ச்சியை நோக்கிய பெரும் திருப்பு முனையைக் குறித்து நிற்கிறது.

அற்புதமான தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் நிறைந்த புலிகளின் போராட்டம் தமிழர் மத்தியில் என்றுமில்லாதவாறு தேசாபிமான உணர்வையும், விடுதலைப் பற்றையும் ஊட்டியிருக்கிறது. பரந்துபட்ட பொதுமக்களை சாதிய, வர்க்க, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரே இலட்சியத்தில் ஒன்றுபடுத்தி, ஒரே தேசிய சக்தியாகக் கட்டி எழுப்பிய சாதனையும் புலிகளையே சாரும்.

இன்று எமது போராட்டம் தென் ஆசியாக்கண்டத்தில் முதன்மை பெற்ற தேசிய விடுதலைப் போராட்டமாக உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. போர்த்திறனிலும், இலட்சிய உறுதியிலும், தியாக சிந்தையிலும் ஈடிணையற்றதாகத் திகழும் புலிகளின் தன்னாட்சி உரிமைப் போர் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு உந்து சக்தியாகவும், வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலை இராணுவத்தின் தோற்றமும், தாயக மீட்புப் போரில் ஈட்டப்பட்டு வரும் மகத்தான சாதனைகளும், எதிரி இராணுவம் எதிர்கொள்ளும் பேரிழப்புகளும் தமிழீழ மக்களுக்கு என்றுமில்லாத ஒரு புதிய நம்பிக்கையை புலிகள் இயக்கம் மீது ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் புதிய தசாப்தத்தினதும் வரலாற்றுப் படைப்பாளிகளாக திகழப்போகும் விடுதலைப் புலிகள் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி தமது புனித இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள் என மக்கள் மத்தியில் நம்பிக்கை பிறந்திருக்கிறது.

முற்றும்

# தாகம்

அம்மாவின் கைகளில் படம் இருந்தது.

அழகான சட்டமிடப்பட்டு,சிரித்தபடி, கையிற்கு அளவான அளவில்.

அம்மாவின் மகனுடையதுதான்.

அம்மா - கைகளால் தடவினாள். கண்ணை வெட்டி, வெட்டி எதிர்பார்ப்போடு பார்த்தாள்.

படத்தில் தூசு பட்டிருப்பது போலவும் - அது அழிந்து விட்டால் தெரிந்துவிடும் போலவும் அம்மா அடிக்கடி தடவினாள்.

" அம்மம்மா,படத்தில் சித்தப்பா சிரிச்சபடி இருக்கிறார்" அமுதா காதிற்குள் கத்தினாள்.

அம்மா திரும்பவும் தடவினாள்.

மங்கலாக..., ஒரு ஒளிப்பொட்டாவது ..,

"அவன் கெட்டிக்காரன், சாகேக்கையும் வீரமாய்த்தான் செத்தவன்" அருகிலிருந்த சின்னம்மா மெதுவாக அடைத்த குரலில் முணுமுணுத்தாள்."

என் மகன் எப்படி இருப்பான்.

அம்மா இயன்றமட்டும் உற்றுப் பார்த்தாள்.

வெறும் இருளாக...,

எதுவுமே அற்ற சூனியமாக...,

அந்தப்படத்தை சுவரில் சாய்த்து வைத்து விட்டு அந்தத் திசையை நோக்கியே விழிகளைத் திறந்தபடி.... அம்மா...

'என்றாவது ஒரு நாள் ஒரு ஒளிக் கீறல் - என் மகனின் உருவம் என் மனதில் படிய வேண்டும்' அவள் ஏக்கத்துடன் காத்திருக்கத் தொடங்கினாள்.

x x x

சிறுகதை

சரியாக 14வருடங்கள் இருக்கும்.

அப்போது தான் அம்மாவிற்கு சாதுவாக பார்வை மங்கத் தொடங்கி இருந்தது. அப்பாவின் வருமானம் வீட்டிற்குப் போதுமாக இருந்தது.ஆனாலும் சிறிது வறுமை தலைகாட்டி இருந்தது. பெரிய ராசன் எப்போதுமே எங்காவது வேலை தேட வேண்டும் என அலைந்து கொண்டிருந்தான். சின்னவன் தான் அம்மாவிற்கும் தங்கச்சிக்குமாக வீட்டில் நின்றான்.

"என்ர பார்வை போறதுக்கிடையில் என்ர பிள்ளையள் வாழுறதை நான் பார்க்க வேணும்" அம்மா பழங்காலத்து கிழவிகளை போன்று புலம்பத் தொடங்கினாள்.

"அது பிரச்சனை இல்லையணை கண்ணாடி போட்டால் எல்லாஞ் சரிவரும்" பிள்ளைகள் அம்மாவிற்கு ஆறுதல் சொன்னார்கள். அம்மா வைத்தியசாலைப் படிகளில் ஏறி இறங்கத் தொடங்கினாள். சின்னவன் யாழ்ப்பாணத்தின் பெரிய வைத்தியரிடம் அம்மாவைக் கூட்டிப் போனான்,

பரிசோதனைகள் முடிந்தன.

"தம்பி, அம்மாவை வெளியில விட்டுட்டு நீர் மட்டும் வாரும்" டாக்டர் சின்னவனை தனியாக அழைத்துச் சென்றார்.

"அம்மாவிற்கு எனி கண் சரிவராதப்பன்"

சின்னவனுக்கு நெஞ்சத்தில் நெருடியது. எனி அம்மா வாழும் காலமனைத்தும் கண்தெரியாதவளாகவே வாழப் போகிறாள்- இன்னும் சில நாட்களுக்கு அம்மா பிள்ளைகளைப் பார்ப்பாள் - உலகத்தைப் பார்ப்பாள் அதன் பின்பு.. சின்னவன் வாடிய முகத்துடன் வெளியே வந்தான்.

"என்னவாம்"

"கண்ணாடி போட்டா - எல்லாஞ் சரிவருமாம்" சின்னவன் அம்மாவின் முகத்தைப் பார்க்காமல் நிலத்தை பார்த்தபடியே சொன்னான்.

அம்மாவிற்கு கண்ணாடி பொருத்தமாகவே இருந்தது.

எல்லாம் தெளிவாகத் தெரியுதென்றாள்.

சின்னவன் முன்னுக்கு நின்றான். அவனுக்கு அப்போது பதினெட்டு வயதுதான் இருக்கும். உருண்டை முகம், கட்டையாக வெட்டப்பட்ட தலைமயிர், சாதுவான மங்கிய நிறம், எவரையுமே கவர்ந்துவிடும் சிரிப்பு. ராசனும், தங்கச்சியும் வந்தனர் - அப்பாவும் வந்தார். அந்த இனிய மாலையிலேயே தந்தையின் காதிற்குள் சின்னவன் சொன்னான்



அம்மாவிற்கு வெளிச்சமும் — இருட்டும் தெரியாது,
எந்த நேரமும் சுவரைப்பார்த்து விழித்துக் கொண்டிருப்பாள்.
அம்மாவிற்கு நம்பிக்கை,
என்றாவது ஒரு நாள் — ஒரு ஒளிப்பொட்டு......
ஒரு ஒளிக் கீறல்...... தெரியும்.
அம்மாவிற்கு மகனைப் பார்க்க வேண்டும்......

"அப்பா- அண்ணைக்குக் கெதியா கல்யாணத்தை - பேசுங்கோ"

x x x

அம்மாவிற்கு மிக விரைவாகவே பார்வை மங்கிக் கொண்டுவந்தது. அவள் கண்ணாடியை கழற்றி எறிந்து விட்டாள். ராசனின் திருமணம் நடந்தது. அம்மாவிற்கு வெறும் நிழலுருவங்கள் மட்டும் சாதுவாகத் தெரிந்தன. விரைவிலேயே வெறுமையான இருள் அவள் கண்களிற்குள் குடிபுகுந்து கொண்டது.

' அம்மா கண்போனா என்னம்மா, உனக்கு நானிருக்கிறன் தானே. என்ன வேணும் சொல்லு" சின்னவன் தாயை அமைதிப்படுத்துவான்.

"எனக்கு உன்னைப் பார்க்கத் தான்ரா கண் வேணும்" அம்மாவின் கண்கள் கண்ணீரை மறக்காமல் சிந்தும்.

நாட்கள் சென்றன. பனைமரம் போல உறுதியாக நின்ற அப்பா படுக்கையில் விழுந்தார். அவரின் ஒருபக்கத்து காலும், கையும் இழுத்துக் கொண்டது. வைத்தியர்கள் கையை விரித்தனர், அப்பா படுக்கையில் கிடந்தார். வீட்டில் வறுமை மெதுவாகத்தவழத் தொடங்கியது,

பெரிய ராசன் - வேலை தேடி வெளிநாட்டுக்குப் பயணமானான்.

x x x

அம்மாவிற்கும் அப்பாவிற்கும் எல்லா வேலையையுமே சின்னவனே செய்யவேண்டி இருந்தது. தங்கச்சி சின்னப்பிள்ளை - அவள் பள்ளிக்கூடம் போனாள். சின்னண்ணனுக்கு வேலைகளில் உதவினாள்.

நாட்கள் வருடங்களாகிக் கொண்டிருந்தன. நாட்டு நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. சின்னவனுக்கு அம்மாவையும் - அப்பாவையும் கவனிப்பதே முழு வேலையாய்ப் போய்விட்டது.

வீதிகளில் மனிதஉயிர்கள் காரணமற்று விழத் தொடங்கின. தமிழீழ தேசம் எங்கும் ஆயுதம் தரித்த பேய்கள் கொடிய ஆட்சி நடத்தத் தொடங்கின.

இரவுகள் பயங்கரமாகின...,

மனித உயிர்கள் காரணமற்று...,

"அம்மா நாங்கள் வீடுகட்ட வேணும், நல்லா வாழ வேணும் எண்டு சிந்திக்கிறம் ஆனா ஒரு இரவில எங்கட வீடு எரிஞ்சு போகுது. நாங்கள் காலங்காலமாக சேர்த்த சொத்துகள் களவாடப் படுகுது. ஏன் .. எங்கட மானம் போய் உயிர் கூடப் போகுது. இதுக்கிள்ளை இதைப்பார்த்துக் கொண்டு தான் நாங்கள் வாழ வேணுமோ" சின்னவன் அம்மாவிடம் குமுறிக் கொண்டிருந்தான்.

"அதுக்கு நாங்கள் என்ன மோனை செய்யேலும்" அம்மா கட்டிலில் இருந்து எழுந்திருந்தபடியே கேட்டாள்.

"நாங்கள் போராடவேணுமம்மா"

அம்மா திகைத்துப்போய் இருந்தாள். கதவுக்கு அருகில் நின்ற தங்கச்சி நிலம் பார்த்தாள் - கால்களில் விழிநீர்கள் பட்டுத் தெறித்தன.

" அண்ணை உன்னை விட்டிட்டு என்னால இருக்கேலாது" அவள் மனது துடித்தது.

சின்னவன் இடையிடையே வீட்டுக்கு வராமல் விடத் தொடங்கினான். வேலைகளில் பாதியை தங்கச்சி செய்யத் தொடங்கினாள்.

நாட்கள் சென்றன.

சின்னவன் அடிக்கடி வீட்டுக்கு வராமல் விடத் தொடங்கினான். தங்கச்சி அதிகமாக வேலைகளைச் செய்யத் தொடங்கினாள். இளவயதின் ஆரம்பத்தில் அவள் கால் வைத்திருந்தாள். படிப்பை விட வேலைகள் அவளுக்கு அதிகமாக இருந்தது.

அப்பா சாய்வு நாற்காலியிலேயே தொடர்ந்து இருந்தார்.

அம்மா எல்லாவற்றிற்குமே அவனை எதிர்பார்த்திருந்தாள்.

சின்னவன் வீட்டுக்கு வராமலே போனான். சில நாட்கள் சென்றன. 'சின்னவனை இராணுவத்தினர் கைதுசெய்து விட்டார்கள்' என்று தூரத்து உறவு முறையான ஒருவர் வந்துசொன்னார்.

சின்னவன் சிறையில் இருந்தான்.

படுக்கையில் அப்பா தவிப்புடன் கிடந்தார்.

கண்களை இழந்து அம்மா வீட்டில் மகனை நினைத்து அழுதபடியே இருந்தாள். தங்கச்சி தனியாக நின்றாள். வீட்டில் அவள் நிற்கவேண்டி இருந்தது. அதே நேரம் சின்னண்ணனை சிறையிலிருந்து விடுவிக்கவும் வேண்டும். அலைந்தாள், சிங்களச் சட்டங்களும் சிறைகளும் தமிழர்களுக்கு இலகுவாக இருக்கவில்லை. ஒரு நாள் சிறைக்கதவுகளுக்கு உள்ளே அண்ணனைப் பார்த்தாள். அவன் மெலிந்திருந்தான், ஒழுங்கில்லாததாடி வளர்த்திருந்தான். தங்கச்சி அழுதாள்.

" அண்ணனை கைதியாப் பார்க்கிறதிலை வெக்கப்பட மாட்டாய் என நினைக்கிறன்" என்றான் சின்னவன்.

"நான் வெக்கப்படேலை ஆனால் அப்பாவும் - அம்மாவும் நானும் தனிச்சுப் போனம்"

" நான் வீட்டிலை இருந்திருந்தா இது நடந்திருக்காது எண்டு நினைக்கிறியா - இஞ்சைபார் நானாவது என் இனத்திற்காக போராடவேண்டும் எண்டு சிந்திச்சனான், ஆனால் இந்தச் சிறையில பலர் - தமிழர்களாக பிறந்ததுக்காகவே சிறை இருக்கினம்"

சின்னவன் சொன்னது உண்மைதான். அதன் பின்பும் சில தடவைகள் தங்கச்சி சின்னவனைப் பார்த்துக் கதைத்தாள். ஒவ்வொருமுறையும் கண்ணீரோடு பிரிந்தாள்.

மூன்று வருடங்கள் சிறையின் வெறுப்பூட்டும் வாழ்விலிருந்து சின்னவன் விடுவிக்கப்பட்டான். கொடிய சிறை அவன் உடலிலும் மனதிலும் பலவடுக்களை விதைத்து விட்டு வெளியே விட்டது. அதே நேரம், அவன் மனதில் மேலும் உறுதியையும் - தெளிவையும் அதே சிறையே விதைத்தது.

x x x

வீட்டில் மீண்டும் மகிழ்ச்சி பரவத் தொடங்கியது. அப்பா சாய்வு நாற்காலியிலிருந்து அம்மாவிற்கு பத்திரிகை படித்துக் காட்டத் தொடங்கினார். இப்போதெல்லாம் தங்கச்சியின் வேலைகளில் பாதி குறைந்து விட்டது. அவள் ஒரு சிட்டுக்குருவியைப் போல் உற்சாகமாக இருந்தாள். சின்னவன் வீட்டையேசுற்றிச் சுற்றி வந்தான். அம்மாவை சிரிக்கவைப்பதற்காக அவளுடன் கேலியாகவும் இனிமையாகவும் கதைப்பான். அம்மா நெடுகவும் மகனின் தலையை அவன்தலை முழுவதும் பேன் இருப்பது போன்று தடவிக்கொண்டே இருப்பாள்.

இப்போதெல்லாம் இராணுவத்தினர் வெளியே வர முடியாது. முகாம் வாசலில் அவர்களை மறித்து போராளிகள் காவல் நின்றனர். எல்லா இடங்களிலும் சண்டைகள் அடிக்கடி நடந்தன.

சில வேளைகளில் மெல்லிய இசை சோகமாகப் பரவும், சில போராளிகளின் உடல்கள்..., வீதிகளில் வலம் வரும், அந்த நேரங்களில் சின்னவனின் உள்ளம் துடிக்கும்.

( 9 ஆம் பக்கம் பார்க்க)

# லெப். கேணல் டேவிட்

[4ஆம் பக்கத் தொடர்ச்சி]

" என்னவாம் "......

" இனியரில்லை, சரியாக விளங்கேல்லை பிறபோ...... பிறபோ...... என்று அவையள் கூப்பிட்டமாதிரியிருந்தது......

" சொல்லு "......

" போட்வெடிச்சிட்டுது, வண்டி அனுப்புங்கோ, எண்ட மாதிரிக் கிடந்தது. அவையளின்ரை இனியரில்லை, ஒண்டும் விளங்கேல்லை "......

" ஆர் கதைச்சது ...... "

" டேவிட் அண்ணை மாதிரித்தான் கிடந்து, ஒண்டும் விளங்கேல்லை......

அடுத்தபடகினை ஆயத்தம் செய்தவேளை, இஞ்சின் எடுக்க பிக்கப் விரைந்த வேளை, உறுதியற்ற வோக்கிச் செய்தியை நம்புவதா, இல்லையா என்று யோசித்தவேளை, நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. அலை விரித்துக் கொண்டிருந்தது.



லெப். கரிகாலன்
(சிதம்பரப்பிள்ளை சுரேஸ்)
பிறப்பு: 09-10-1971
வீரச்சாவு:- 09-06-1991

" சன்னதம் கொண்டு நின்றது கடல். தேடப்போகும் படகினை, தேடப்போகவென மற்றப்படகை, தயாராக வைக்க, வைகுதும் கடல் !

நேரம் செல்லச்செல்ல " வோக்கிச் செய்தி பிரமையோ ? " எனநினைக்க வைக்கும், வெறுமையுடன் காத்திருக்கும் வேளையில், தேடப்போன படகின் வோக்கி அழைக்கிறது.

அரியைக்கண்டிட்டம், தூரத்தில் இன்னுமொரு ஆள் தெரியுது......

என்னமாதிரி...... என்னமாதிரி என்ற வோக்கிக்கு பதில் சொல்லாமல் தேடும் படகு கரைநோக்கி வர, " படகில் அரியுடன் ரட்ணா. "

" என்ன நடந்தது ? "

" போட் பிரிஞ்சிட்டுது, நடுவாலை முறிஞ்சு அணியம்தனிய, கடயார்தனிய ரெண்டாப் போச்சுது "

" மற்றாக்கள் என்ன மாதிரி? டேவிட் அண்ணை என்னமாதிரி ? "

" இருட்டுக்கை எல்லாரையும் கூப்பிட்டு டேவிட் அண்ணை ஒண்டாக்கினவர், எல்லாரையும் நீந்தச்சொல்லிப்போட்டு, அவர் கரிகாலனைக் கூப்பிட்டு தன்னட்டை எடுத்தவர்.

முழுவிடயங்களையும் சொல்லமுடியாது அரியும், ரட்ணாவும் மயங்கி விட்டார்கள்.

மீட்கப்பட்ட இருவரும் உப்பு நீரால் உதடுகள் வெடித்து, முகம் புண்ணாகி, " கோலம் கெட்டுப்போய் " இருந்தார்கள்.

படகுகள் போயின, வந்தன. செய்தி கேள்விப்பட்ட சனமெல்லாம் கரைமுழுக்கக் கூடி நின்று தேடினர். படகுகளின் தேடுதலுக்கு மேலாக, டேவிட்டின் திறமையில் எல்லோரும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

" முதலும் இரண்டு நாள் கடலுக்கை கிடந்து, வந்து சேர்ந்தவன்தானே "

" மன்னாரிலை ஒருக்கா இரண்டு பொம்பிளைப்பிள்ளையளைத், தனியக் கொண்டுவந்து சேர்த்தவனெல்லே "

டேவிட்டின் நீச்சல் திறமையில் எல்லோருக்கும் நம்பிக்கை இருந்தது.

" உந்த மட்டு மட்டு நீச்சல் பெடியள் வந்து சேந்திட்டாங்களாம் டேவிட் ஏன் வரமாட்டான்? "

எல்லோரும் நம்பிக்கையுடன் காத்திருந்த போதும், அரி வைத்தியசாலையில் கூறிக்கொண்டிருந்தான் " எங்களை நீந்தச்சொல்லிப்போட்டு அவர் கரிகாலனைத்தான், இழுத்துக் கொண்டு நிண்டவர் "

படகில் சென்றவர்களில் " கடலுடன் கொஞ்சமும் பரிச்சயம் இல்லாத, நீச்சல் தெரியாதவன் " கரிகாலன் மட்டும் தான்.

எல்லோரும் நம்பிக்கையுடன் இருந்த போதும், அரியையும், ரட்ணாவையும் தவிர வேறு எவரும் வரவில்லை...

கரிகாலன் வரவில்லை.........

டேவிட்டும் வரவில்லை......

—பொட்டு—

## டேவிட் பங்குகொண்ட தாக்குதல்கள்

★ 1985ஆம் ஆண்டு மன்னார் பொலிஸ் நிலையத்தாக்குதல் நடைபெற்றபோது தாக்குதற் குழுவை படகில் ஏற்றி மறுகரைக்கு (மன்னார் தீவுக்குள்) கொண்டு சேர்க்கும் கடற்புலிகள் குழுவின் உதவிப்பொறுப்பாளராக இருந்தார் படகில் சென்று பாதுகாப்பாக இறங்குவதே தாக்குதலின் முதல் வெற்றி எனக் கருதப்பட்டது. இத்தாக்குதல் முடிந்த பின்பு அப்போதைய மன்னார்த் தளபதி லெப். கேணல் விக்டர் அவர்களால் டேவிட் பாராட்டப்பட்டான்.

★ 1987ஆம் ஆண்டில் ஆனையிறவு முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சிறிலங்கா இராணுவம் முன்னேற முயன்றபோது கிட்டு அண்ணா தலைமைதாங்கிய தாக்குதலின் போது வீரமரணமடைந்த லெப். அங்கிளின் குழுவில் ஒருவராகச் சண்டை செய்து தோளில் காயமடைந்தார்.

★ 1987ஆம் ஆண்டு யாழ் தொலைத்தொடர்பு நிலையத்தாக்குதலில் ( 8 இராணுவத்தினரைக் கைது செய்தபோது ) 50 கலிபர் துப்பாக்கியுடன் ஒரு குழுவை வழிநடாத்தினார்.

★ 1987ஆம் ஆண்டு பூநகரிக் கோட்டைத் தாக்குதலின் போதும் 50 கலிபர் குழு ஒன்றுடன் சென்று சண்டையில் ஈடுபட்டார்

★ 1989 நெல்லியடியில் இந்திய இராணுவக் காவலரண் மீதான தாக்குதலின்போது அத்தாக்குதற் குழுவின் இரண்டாவது பொறுப்பாளராகச்சென்றார்.

★ 1990ஆம் ஆண்டு வடமராட்சிக் கடலில் சிறிலங்காக் கடற்படையின் தாய்க்கப்பல் மீது நடாத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் ( கரும்புலி மேஜர் காந்தரூபன், கரும்புலி கப்டன் வினோத், கரும்புலி கப்டன் கொலின்ஸ் ) நடவடிக்கையினை தலைமை தாங்கியவர் இவரே.

# தாகம்...

[8 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

" தங்கச்சி - இந்தத் தேசம் தன்னைவிடுவிக்க போராடுது- இதில் வாழுற நாங்கள் என்ன செய்யிறம். சின்னப்பிஞ்சுகள் எல்லாம் எங்களுக்காகச் சாகேக்கை நாங்கள் மட்டும் வாழ வேணும் எண்டு நினைக்கிற நினைப்பே தவறெல்லே" சின்னவன் அடிக்கடி இந்த வார்த்தைகளை சொல்லத் தொடங்கினான். தங்கச்சிக்கு எல்லாமே விளங்கியது.

சின்னவன் பழையபடி வீட்டுக்கு வராமல் விடத் தொடங்கினான். தங்கச்சிக்கு பழையபடி வேலைகள் அதிகமாயின. கடலிலிருந்து பீரங்கிப் படகு ஒன்று கண்டபடி குண்டுகளை வீசிக்கொண்டிருந்த ஒரு மாலை நேரம், அப்பா சின்னவனை அழைத்தார்.

" நான் இன்னும் கொஞ்ச நாளைக்குத் தான் இருப்பன் போலக் கிடக்குது. எனக்கு கொள்ளி வைக்க என்றாலும் நிற்பியா" என்றார் அப்பா. அவருக்குத் தெரியும் அவன் வெளிக்கிட்டுடுவான் என்று நாடிருக்கும் நிலையில இவன் வீட்டுக்கை நிற்கிறதையும் அவர் விரும்பவில்லை. ஆனாலும் மகனின கையால் - தான் எரியவேண்டும் என்று எங்கள் தேசத்து எல்லா அப்பாக்களையும் மாதிரி அவரும விரும்பினார்.

சின்னவன் 'சரி' என்றான். விலகிச் சென்று அம்மாவிற்கு அருகில் இருந்தான். சில வருடங்களுக்கு முன் உயர்ந்து வளர்ந்து கம்பீரமாக நின்ற அப்பா, படுக்கையில் விழுந்து இன்று சாவுடன் போராடிக் கொண்டிருந்தார். சின்னவனின் நெஞ்சம் அழுதது.

இரண்டு மூன்று நாட்களாக சின்னவன் வீட்டுக்கு வரவில்லை. தங்கச்சி நிம்மதி இல்லாமல் தவித்தாள். மூன்றாம் நாள் இரவு சின்னவன் வந்தான். 'தான் எங்கேயோ அவசரமாக போக வேண்டும்' என்று சொன்னான். அண்ணன் ஆபத்தை தேடி போகப் போறான் என்பது தங்கச்சிக்குத் தெரியும். அவள் மௌனமாக நின்றாள். அம்மாவிற்கு விருப்பமில்லை, அப்பாவிற்கு ஏதும் என்றாலும் சின்னவன் அருகில் நிற்க வேண்டும் என்று அம்மா நினைத்தாள்.

"அம்மா, பயப்பிடாதையணை, அப்பாக்கு ஏதுமெண்டா நான் கேள்விப்பட்டவுடன் ஓடிவந்திடுவன் — நாலஞ்சு நாளில எப்பிடியும் வந்திடுவன்" சின்னவன் அம்மாவிடம் கெஞ்சிக் கேட்டான். அம்மா மௌனமாகிவிட்டாள். அவளுக்கு ஏதோ மனதில் சரியாக இல்லை. மகனின் குரலை இன்னொரு தரம் கேட்க வேண்டும் போல் இருந்தது. 'தூர இடத்திற்கு போறபிள்ளை பின்னால கூப்பிடக்கூடாது' அவள் மனது சொல்லியது.

நாட்கள் சென்றன - நாலு அல்லது ஐந்து நாளில் திரும்புவதாக சொல்லிவிட்டு சென்ற சின்னவன் ஒரு மாதமாகியும் இன்னும் வரவில்லை.

அப்பாவின் உடல்நிலை மிகமோசமாகியது — தங்கச்சி தவித்தாள். " எனக்கு கொள்ளி வைக்கிறன் என்றவன் எங்க போட்டான் " அப்பா இரவிலும் புலம்பத் தொடங்கினார்.

அண்ணை வந்திடுவார் - அண்ணை இண்டைக்கு வந்திடுவார்' என்று தங்கச்சி திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தாள். விடாமல் மழைபெய்து கொண்டிருந்த ஒரு அருவருப்பான இரவு நேரம் - அப்பா கண்ணை மூடிக் கொண்டார்.

அம்மா தவித்தாள், தன் வாழ்வின் ஒரு பாதியாகிய கணவனின் இழப்பு அவளை நன்றாகவே பாதித்தது. சாவீட்டு சடங்குகள் எல்லாமே முடிந்தன. அப்பா செத்து ஒரு வாரமாகியும் சின்னவன் வரவே இல்லை.

அம்மாவும் - தங்கச்சியும் சின்னவனை காணாமல்தவித்தார்கள். இரவுகளில் கதவு தட்டும் ஓசை கேட்கும் - தங்கச்சி எழுந்தோடுவாள் ' அண்ணா ' என்று கொண்டே கதவைத் திறப்பாள். வீட்டு முற்றத்தில் நெடுகவும் கிடக்கும் சொறி நாய் ஆறுதலாக விலகிச் செல்லும். தங்கச்சி வெறுப்புடன் படுக்கையில் சரிவாள்.

'அண்ணை நாளைக்கு வந்து விடுவார்' தனக்குள் சொல்லிக் கொள்வாள். அன்று காலையில் வழமைக்கு மாறாக தங்கச்சி வானொலிச் செய்தி கேட்டாள். செய்தி சொல்பவன் அர்த்தமில்லாமல் ஏதேதோ எல்லாம், சொல்லிக் கொண்டிருந்தான் - இடையில் 'சின்னவன் என்றழைக்கப்படும், சின்னராசனை திருக்கோணமலை நகரில் வைத்து படையினர் கைது செய்யச் சென்ற சமயம் அவர் சயனைட்...... ' தங்கச்சி ஓடினாள்.

"அம்மா... அண்ணை..." அவள் அறிவிழந்து போனாள். ஊரும் சொந்தங்களும் கூடின, அம்மாவால் வேதனையை தாங்க முடியாமல் இருந்தது. அவள் அழுதாள் எல்லாத் தாய்மாரைப் போலவும் தனது பிள்ளையின் படத்தை பார்த்து அழுவதற்கு அவளால் முடியாது. தனது மகனை கட்டி அணைத்து அழுவதற்கு அவனின் உடல் கூட அவளுக்கு இல்லை. அம்மா அழுதாள் - தன் துயரங்கள் அனைத்தையும் அழுதழுது கண்ணீரில் கரைத்தாள்.

அம்மா சுவரில் பொருத்தப்பட்டிருந்த சின்னவனின் படத்தை நோக்கி விழிகளை திறந்தபடி இருந்தாள்.

தங்கச்சி பாவம் - அவளுக்கு இப்போதும் வேலைகள் அதிகம், இரவில் கதவில் தட்டும் சத்தம் கேடகும். அரைத் தூக்கத்தில் அண்ணன் வந்துவிட்டான் என்று எழுவாள். கதவை திறந்ததும் அந்தக் கிழண்டிப் போன சொறி நாய் ஆறுதலாக விலகிப் போகும் அண்ணன் எனி வரவே மாட்டான் என்ற உண்மை மனதை உறுத்தும். அழுவாள் - இயலுமட்டும் அழுவாள்.

அம்மாவிற்கு வெளிச்சமும் இருட்டும் தெரியாது. எந்த நேரமும் சுவரைப் பார்த்து விழித்துக் கொண்டிருப்பாள்.

அம்மாவிற்கு நம்பிக்கை.

என்றாவது ஒரு நாள் - ஒரு ஒளிப் பொட்டு...... ஒரு ஒளிக் கீறல்...... தெரியும்.

அம்மாவிற்கு மகனைப் பார்க்க வேண்டும்.

x x x

முற்றும்

# மண்மீட்பு நிதியின் தேவையும்

அதிகரித்துவரும் போர்ச்செலவுகளை ஈடுசெய்யும் முகமாக எமது மக்களிடமிருந்தே நிதியைப்பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துவிட்டது.அதனால் தரவசதியுள்ள குடும்பங்களிட மிருந்து தமிழீழ மீட்பு நிதியாக தலா இரண்டு பவுண் தங்கத்தை அல்லது 10,000 ரூபா பணத்தை கடன் அடிப்படையில் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். பெறப்படும் தங்கம் மாதாந்தம் 100 கடன் பத்திரதாரர் என்ற அடிப்படையில் மீளளிக்கப்பட்டு வருகின்றது.

2 பவுண் தங்கத்தை அல்லது 10,000 ரூபா பணத்தை செலுத்துவதற்கு வசதியற்ற எவரிடமிருந்தும் மீட்புநிதியைப் பெறுவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

யாழ் மாவட்டத்திலுள்ள கணிசமான குடும்பங்கள் எமது வேண்டுகோளை ஏற்று மனவிருப்புடன் மீட்பு நிதியை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதே சமயம் இன்னொரு பகுதியினர் தரவசதியிருந்தும் தங்களது தேசியக்கடமையைத் தட்டிக்கழித்து வருகின்றனர். இத் தகையவர்களது பொறுப்பற்ற செயலினால் மீட்பு நிதியைச் சேகரிக்கும் செயலானது ஆங்காங்கே சிரமங்களைச்சந்திக்கின்றது.

இச் சிரமங்கள் என்ன? என்பதையும் இம் மீட்புநிதியை தர வசதியுள்ள அனைவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவையையும், அவசியத்தையும் இங்கே தெளிவுபடுத்துகின்றோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது இன்று மிகப் பெரியவளர்ச் சிக்கட்டத்தில் நிற்கின்றது. ஒருசில இளைஞர்களைக்கொண்டு தலைமறைவு சக்தியாகத் தோற்றம் கண்ட எமது இயக்கம், இன்று, பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைக் கொண்ட பெரியதொரு தமிழர் படையாக வளர்ச்சி கண்டுள்ளது.

பலம்வாய்ந்த சிறீலங்காவின் முப்படைகளையும் எதிர்த்துச் சமர் புரியும் அளவுக்கு எமது படையின் திறமை உயர்ந்து நிற்கின்றது.

அந்தப் பணத்தை எங்கிருந்து என்ன வழி மூலம் பெறலாம என்ற கேள்விகளுக்கு உரியபதில்களை எமது மக்களும் அறிந்து கொள்ளவேண்டும்.

சிறீலங்காவைப் பொறுத்தவரை அது ஒரு நாடாகும். அந்நாட்டின் அரசு தனது இராணுவச் செலவுகளை தனது வருமானத்திலிருந்து பெற்றுக்கொள்கின்றது.

ஒரு அரசின் வருமானமென்பது அந்த நாட்டு மக்களிடமிருந்து பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் வாழவைக்க வேண்டும், எனவே நாமும் எதிரியைப்போன்று படைப் பலத்தைப் பெருக்கவேண்டும். அதன்பொருட்டு பெருந்தொகையில் நிதியையும் திரட்டவேண்டும்.

அப்படியாயின் இந்நிதிக்கு நாம் எங்கே போவது ?

ஒரு அரசுக்கு இருப்பது போன்று வசதிகளும், வாய்ப்புகளும் எமக்கு இல்லை. ஆனாலும் விடுவிக்கப்பட்ட நிலத்தில் நாம் ஒரு அரசைப் போன்றே செயற்படுகின்றோம். எனினும் நாம் ஒரு அரசை இன்னமும் அமைக்கவில்லை. அதனால் ஒரு அரசுக்குரிய வருமானங்கள் எமக்கில்லை.

மேலும், தமிழீழம் நல்ல வளமுள்ள நிலம் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. எமது மக்களும் நல்ல உழைப்பாளிகள் என்பதும் அனைவரும் அறிந்ததே. ஆனால், ஒருபுறம், போர்ச்சூழல் காரணமாக அந்த வளத்தை நாம் பயன்படுத்த முடியாதுள்ளது. இன்னொரு புறம் அந்த வளத்தைப்பயன்படுத்த விடாது எதிரி தடுக்கின்றான்.

இதனால் எமது மூலவளங்களிலிருந்து எமது போராட்டத்திற்குத் தேவையான நிதியை ஈட்டிக்கொள்வது முடியாததாகிவிடுகின்றது.

அத்துடன் சர்வதேச, பிராந்திய அரசியல் சூழல் காரணமாகவும், தமிழீழம் ஒரு நாடாகவும் பரிணாமிக்காததாலும் வெளிநாடுகளிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுக் கொள்வதும் சாத்தியமற்றதாகி விடுகின்றது.

ஆரம்பத்தில், ஒரு சிறிய கரந்தடிப்படையணியாக நாம் இருந்த போது எமக்குப் பெருமளவில் நிதி வடிக்கைகளுக்காக செலவு செய்து வருகின்றோம். இது எமக்கெதிரான போரில் எதிரி பயன்படுத்தும்தொகையில், பதினைந்தில் ஒரு பங்கு என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொகையானது மிகமிகக் குறைந்ததொன்றாகும். இத் தொகையை பலமடங்காக அதிகரிக்க வேண்டிய தேவை எழுந்துவிட்டது.

இன்று சிங்களப்படைகள் ஆயுத பலத்தில் எம்மைவிட பலமடங்கு உயர்ந்து நிற்கின்றன. அவனிடம் விமானப்படையும், கடற்படையும் இருப்பது ஒருபுறமிருக்கஅவைமூலம் குண்டுகளையும், ரவைகளையும் வெள்ளம் போல எதிரி எம்மீது வீசிக்கொண்டிருக்கின்றான்.

எதிரியின் இந்தப் படைக்கலசக்திக்கு நாமும் ஈடுகொடுக்க வேண்டும். அப்படியாயின் எமது போராட்டச் செலவுகளையும் பன்மடங்கு அதிகரிக்க வேண்டும். இராணுவ உபகரணங்களினதும், வெடிமருந்துகளினதும் விலை சாதாரண மக்களால் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு அதிகமானது.

சாதாரண ஒரு ஆர். பி. ஜி ரக கை ஏவுகணையின் விலை 40,000 ரூபா

அதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு எறிகணையின் விலை 12,000 ரூபா.

ஏ. கே ரக துப்பாக்கி ஒன்றின் விலை 15,000 ரூபா.

சாதாரண எறிகணை ஒன்றின் விலை 5,000 ரூபா.

ஏ. கே ரக துப்பாக்கிக்கு பயன் படுத்தும் ரவை ஒன்றின் விலை 0 ரூபா

# தமிழீழ மக்களின் கடமையும்

மிகப்பெரிய பொருட்செலவைச் செய்து நவீன படைக்கலங்களை தாங்கி நிற்கும் சிங்களப்படையணிகளுக்கு எதிராக, மட்டுப்படுத்தப்பட்ட ஆயுதங்களைக்கொண்டு புதிய போர் நுட்பங்களைப் பயன்படுத்தி போர் புரிந்து கொண்டிருக்கின்றோம்.

ஒரு போர் என்பது மிகப்பெரும் பொருட்செலவில் நடாத்தப்படுவதாகும்.

போர் விரிவடைய விரிவடைய அதற்கேற்றாற்போல் போர்ச்செலவும் அதிகரிக்கும்.

ஒரு போரில்முன்னணியில் நிற்க வேண்டுமாயின் செலவைப் பொருட்படுத்தமுடியாது:

சாதாரணமாக போரிடும் நாடுகள் தமது தேசிய வருமானத்தில் ஏறக்குறைய கால் பங்கைப் போரிற்கே செலவிடும்.

சிறீலங்கா அரசும் அடுத்த வருடத்துக்கு 1500 கோடி ரூபாவுக்கும் மேல் எமக்கெதிரான போரில் செலவிட ஒதுக்கியுள்ளது.இது சிறீலங்கா அரசின் வரவுசெலவுத்திட்டத்தில் 10% என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது மாதாந்தம் 125 கோடி ரூபாவை போர்ச்செலவுக்கு ஒதுக்கியுள்ளது.

இன்னும் சொல்லப்போனால் நாளொன்றுக்கு 4 கோடி ரூபாவைச் செலவுசெய்து தமிழீழ மக்களுக்கு எதிரான போரை நடாத்திக்கொண்டிருக்கின்றது.

போர் வெறிகொண்ட சிங்களப் படைகளிடமிருந்து எமது மக்களை விடுவிப்பதற்காக நாம் நடாத்தும் விடுதலைப்போரில் எவ்வளவு பணத்தைச் செலவுசெய்கின்றோம்?

பெறப்படும் பல்வேறுவிதமானவரிப் பணங்கள் உட்பட அந்த நாட்டின் வளம், அந்த மக்களின் உழைப்பின் ஒரு பகுதி ஆகியவற்றில் இருந்தும் பெறப்படுகின்றது.

அத்துடன் ஒரு அரசு என்ற ரீதியில் வெளிநாடுகளிடமிருந்து கடனாகவும், அன்பளிப்பு என்றகோதாவிலும் தனது நிருவாக - இராணுவ செலவினங்களுக்குரிய பணத்தைத் தேடிக்கொள்கின்றது. இந்தப் பணத்திலிருந்து தான் அது போர் விமானங்கள், போர்க்கப்பல்கள், பீரங்கிகள், எறிகணைகள், ரவைகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்தும், தனது படைப்பலத்தைப் பெருக்கியும் தமிழீழத்திற்கெதிரான போரை தொடர்கின்றது.

இப்போரிலிருந்து நாம் விலகியிருக்க முடியாது. இது எமது இனத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு வரலாற்று நிர்ப்பந்தம், இப்போரை நாம் எதிர் கொண்டேயாக வேண்டும். எதிரியை எமது நிலங்களிலிருந்து விரட்டி, எமது மக்களைப் தேவைப்படவில்லை. அதனால் நிதிக்கான வேண்டுகோள்களை மக்களிடம் விடுக்கவும் இல்லை.

ஆனால் இன்று, நிலங்களை விடுவிக்கும் அளவுக்கு போராட்டம் முன்னேறிவிட்டது. போராட்டத்தின் தேவைகளும் அதிகரித்துவிட்டது.

பெரும் வளர்ச்சிகண்ட எமது படையணியை மேலும் கட்டி வளர்த்து அதைப்பராமரிப்பதுடன் அப்படைக்குத்தேவையான படைக்கலவசதிகளையும் நாம் பெறவேண்டியுள்ளது. இத்துடன் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பும் எம்முடையதே. அரசியல் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவும் இன்னோரன்ன நிருவாகச் செலவுகளுக்குமாக பெருந்தொகையில் பணம் தேவைப்படும்.

இன்றைய நிலையில் மாதாந்தம் 8 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை நாம் போராட்ட நட

| | | |
|---|---|---|
| ஏ. கே. ரக துப்பாக்கி ஒன்று | 15, 000 | ரூபா |
| இதற்குப் பயன்படுத்தப்படும் ரவை ஒன்று | 10 | ,, |
| ஆர். பி. ஜி. ஒன்று | 40, 000 | ,, |
| இதற்குப் பயன்படுத்தப்படும் எறிகணை | 12, 000 | ,, |
| சாதாரண எறிகணை ஒன்று | 5, 000 | ,, |
| விமான எதிர்ப்புத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் ரவை ஒன்று | 800 | ,, |
| ஒரு ஜொனி மிதிவெடியை தயாரிக்க ஆகும் செலவு | 200 | ,, |
| கடலில் நாம் பயன்படுத்தும் படகின் விலை | 25 இலட்சம் | |
| '' டோரா '' சண்டைப் படகு ஒன்று | 5 கோடி ரூபா | |

நாம் வைத்திருக்கும் விமான எதிர்ப்புத் துபபாக்கிக்கு பயன்படுத்தப்படும் ரவை ஒன்றின் விலை 800 ரூபா.

ஒரு ஜொனி மிதிவெடியைத் தயாரிக்க ஆகும் செலவு 200 ரூபா.

இவை தவிர நாம் கடற் சண்டைகளையும் எதிர் கொள்கின்றோம். ஒரு கடற் சண்டைக்குத் தேவையான ஆயுத தளபாடங்கள் மிகமிகப் பெறுமதியானவை. சாதாரணமாக இன்று நாம் பயன்படுத்தும்ஒரு படகின் விலை 25இலட்சம். இப்படி எத்தனையோ படகுகளை இழந்துதான் நாம் பயணம் செல்கின்றோம். சாதாரணமாக கடற் சண்டைகளில், தரைப்படைக்குப் பயன்படும் ஏ. கே ரக சுரிகுழல் துப்பாக்கிகளை பயன்படுத்துவதில்லை. அதற்கு மிக நவீனரக ஆயுதங்கள் வேண்டும் அவை மிகப் பெறுமதியானவை. எனினும் அவற்றை நாம் பெறத்தான் வேண்டும். அவற்றைப் பெற்று எமக்கென்றொரு நவீன கடற்படையை கட்டியெழுப்ப வேண்டிய அவசியம் உண்டு.

சிறீலங்கா கடற்படையினர் வைத்திருக்கும் '' டோரா '' எனப்படும் ஒரு சண்டைப் படகின் விலை 5 கோடி ரூபாவாகும். கடலில் நாம் எதிரியுடன் பொருத வேண்டுமாயின் இத்தகைய சண்டைப் படகுகளை நாமும் வைத்திருக்கத்தான் வேண்டும்.

இவ்வாறாக இராணுவ செலவினங்களை அதிகரித்தபடிதான் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கிச் செலுத்த முடியும்.

# ஏன் வற்புறுத்தல் தேவையாகின்றது

இந்த உயரிய நோக்கத்துடன் தான் நாம் தமிழீழ மீட்பு நிதி என்ற பெயரில் வசதியுள்ள ஒவ்வொரு குடும்பத்திடமும்இருந்து தலா 2 பவுணை அல்லது 10,000 ரூபாவை பெற்று வருகின்றோம்.

மக்களிடமிருந்து பெறப்படும் இத் தங்கமானது மா நாந்தம் 100 கடன் பத்திரதாரர் என்ற அடிப் படையில் மீளளிக்கப்படும்.

மீட்பு நிதியைத் தர வேண்டிய தேவையையும், உங்களது கடமை யையும் உணர்ந்து அனைத்துக் குடும்பங்களும் இம் மீட்பு நிதிக்கு பங்களிப்புச் செய்யவேண்டும் என நாம் கேட்கின்றோம்.

அன்புக்குரிய எமது மக்களே !

சீருடையுடன் ஆயுதபாணியாக நிற்கும் ஒரு போராளியிடமிருக்கும் ஆயுத வெடிமருந்தின் பெறுமதி ஏறக்குறைய 20,000 ரூபா ஆகும். இப்படி எத்தனையாயிரம் போராளிகளை நாம் வைத்திருக் கின்றோம். நீங்களே கணக்கிட்டு தொகையைக் கூட்டிப்பாருங்கள்

இவ்விதம் ஒரு போராளி தான் வைத்திருக்கும் வெடிமருந்துகளைப் போன்று - அது ரவைகளாகவோ, எறிகணைகளாகவோ பல மடங்கு வெடிமருந்தை ஒரு சமரில் மட்டும் செலவழிக்கின்றான்.

ஒரு சமரென்றால் பலநூறு போராளிகள் பங்கேற்பார்கள். ஆனையிறவுச் சமரில் 2000 போரா ளிகள் பங்கேற்றார்கள். மணலாறுச் சமரில் 1500 போராளிகள் பங்கேற் றார்கள். ஒவ்வொரு போராளியும் பலநூறு ரவைகளை பயன்படுத்து வார்கள். நூற்றுக்கணக்கில் எறி கணைகளையும், கைக்குண்டுகளை யும், ஜொனி மிதிவெடிகளையும் பயன்படுத்துவோம். விமான எதிர்ப்புத் துப்பாக்கியையும் பயன் படுத்துவோம்,

அப்படியாயின் முன்னர் குறிப் பிட்டபடி தனி ஒரு வெடிப் பொருளின் விலையைக் கூட்டி மொத்தமாகக் கணக்கிட்டுப்பாருங் கள். இசேசமயம் செலவழித்த தற்குப் பதிலாக புதிதாக நாம் வெடிப்பொருட்களை கொள்வனவு செய்தேயாகவேண்டும்.

இதைத்தவிர, களத்தில் காய மடைந்து ஒரு மாதம் படுக்கை யில் இருக்கும் ஒரு தோழனுக்குத் தேவையான மருத்துவ - பரா மரிப்பு செலவுகளையும் கருத்தி லெடுங்கள்.

உங்களது மகன் அல்லது மகள் சுகயீனமாக ஒரு மாதம் படுத்த படுக்கையாக இருந்தால் அவனுக்கு சிகிச்சைசெய்து - பாதுகாக்க நீங் கள் எவ்வளவு பணத்தைச் செல வழிப்பீர்கள்.

ஒவ்வொரு சமரிலும் பல நூற்றுக் கணக்கான இந்த மண்ணின் பிள்ளைகள் காயமடைகின்றனர். அவர்களுக்கு வைத்தியம் செய்து பராமரித்து - பாதுகாக்க வேண்டு மாயின் நாம் எவ்வளவு பணத்தைச் செலவழிக்க வேண்டும்.

ஆனையிறவுச் சமரில் காய மடைந்த போராளிகளுக்கான விசேட உணவு பழவகைகளுக்கு மட்டும் 2 கோடி ரூபாவுக்குமேல் செலவழிந்துள்ளது.

இவைகள் தவிர போராளிகளுக் கான உடைகள், உணவுகள் ஏட யத்திலும் சாதாரண ஒரு பொது மகனை அல்லது ஒரு மாணவனை விட - செலவு அதிகரிக்கின்றது.

ஒரு சோடி உடைகளை மட்டும் வைத்திருக்கும் ஒரு போராளி போர்ச் சூழல், அதிகூடிய நேர பாவனைகள் காரணமாக அந்த உடைகளை நீண்ட காலம் பயன் படுத்தமுடியாதுள்ளது.

எனவே ஒரு போராளிக்கு அடிக் கடி உடைகள் தேவைப்படுகின்றது.

உணவைப் பொறுத்தவரை தனது குடும்பநிலையைக் கருத்திற் கொண்டு ஒரு குடிமகன் தனது உணவை இரண்டு நேரமாகக் குறைத்துக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு போராளியை அப் படிப்பராமரிக்க முடியாது. சக்தியை வழங்கக்கூடிய உணவு வகை களையே - அது என்ன விலையாக இருந்தாலும் - கொடுக்கவேண்டும், உடல்தெம்பு இல்லாவிடின் களத்தில் சண்டையிட முடியாது. அத்துடன் ஒரு சமர்க்களத்தில் உணவு விநி யோகம் நடைபெறும்போது உணவு கள் சேதமடைய வாய்ப்புகள் நிறைய உண்டு. எனவே களத்தில் நிற்கும் 100 போராளிகளுக்கு உணவு தேவையாயின் 150 போரா ளிகளுக்குத் தேவையான அளவுக்கு சமைக்கவேண்டும்.

இவ்வாறெல்லாம் எமது தேவைகளும், செலவுகளும் மிக அதிகமாகவே இருக்கும்.

இத்தகைய பிரமாண்டமான செலவுகளை ஓரளவிற்கேனும் ஈடு செய்யும் ஒரு வழிதான் மீட்பு நிதிக்காக ஒரு குடும்பத்திட மிருந்து 2 பவுன் தங்கத்தை சேக ரித்தல் ஆகும். வசதியுள்ள எல் லாக் குடும்பங்களுமே எமது போராட்டத்தேவையைப் புரிந்து கொண்டு பொறுப்புணர்வுடன் செயற்படுவார்களானால் இந்த நிதித்தேவையை கணிசமான அளவு ஈடுசெய்ய முடியும்.

> **யாழ். மாவட்டத்தில் சுமார் இரண்டு இலட்சத்துஇருபத்தையாயிரம் குடும்பங்கள் இருக் கின்றன. இதில் ஒரு இலட்சத்து இருபத்தை யாயிரம் குடும்பங்களை வசதியற்றவர்களாகக் கருதினோம்.**
>
> **மிகுதி ஒரு இலட்சம் குடும்பங்களைத்தான் மீட்பு நிதி பெறுவதற்கெனத் தேர்ந்தெடுத் தோம்.**

இந்த மீட்பு நிதித்திட்டத்திற்கு ஒத்துழைப்பது இம் மண்ணில் பிறந்த அனைவரது கடமையு மாகும்.

ஆனால் ஒரு பகுதி மக்கள் தங் களிற்கிருக்கும் தேசியக்கடமை களைப் புறக்கணித்து சுயநல நோக்குடன் செயற்பட முனைகின் றார்கள் இது எமக்குப் பெருத்த மனவேதனையைக் கொடுத்துள் ளது. இவர்களில் பெரும்பாலா னவர்கள் மிகவும் வசதியான நிலையில் இருந்தும் வசதியற்றவர் கள் எனப் பொய் கூறி மீட்புநிதி செலுத்துவதிலிருந்து தப்பிப்போக முயற்சிப்பது மேலும் எமது மன தைப் புண்ணாக்குகின்றது.

வசதியிருந்தும் மீட்புநிதி செலுத் தாத மக்களே !

எமது தாய் நாட்டின் விடுதலைக் காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் எதிரி முகாம்களைச் சுற்றியும், கடற்கரையோரங்களி லும், மனித சஞ்சாரமற்ற காடு களிற்குள்ளும் நின்று எதிரியுடன் போராடிக் கொண்டிருக்கின்றார் கள். தாய் நாட்டைப் பாதுகாப் பதற்காக தங்களது உயிர்களையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியானால் நீங்களும். உங் களது அம்மாவும் பாட்டனும் பூட்டனும் பிறந்து — தவழ்ந்து வாழ்ந்த மண்ணிற்காக என்னத் தைக் கொடுத்துள்ளீர்கள்?

தாய் நாட்டின் துயர்துடைக்கப் போராடத்தான் வேண்டாம். போராடுபவர்களுக்கு உதவி புரிந்து உறுதுணையாக இருக்க லாம் தானே!

இந்த 1½ வருட போர்ச்சூழல் காரணமாக எமது மக்களில் பெரும்பாலானோர் எந்தவித வரு மானத்தையும் பெறமுடியாதுள்ள னர் என்பது எல்லோரும் அறிந் ததே.

நாம் கேட்கும் மீட்புநிதி உங்களது வருமானத்திலிருந்தல்ல, உங்களது சொத்திலிருந்து, உங்களது சேமிப்பி லிருந்து தாருங்கள் என்றே கேட் கின்றோம். அதுவும் கடனாகத் தாருங்கள் என்றே கேட்கின்றோம்.

அது எப்படி முடியும்? எமது குடும்பத்தின் எதிர்காலத்திற்காக சேமித்த சொத்தில் இருந்து எப் படி நாம் தரமுடியும்? என்ற கேள்விகள் எழத்தான் செய்கின் றன.

அன்புக்குரிய மக்களே !

இன்று தென்தமிழீழ நிலைமை களை எண்ணிப்பாருங்கள். அங்கே யார் சொத்தை வைத்திருக்கின் றார்கள்? யார் எதிர்காலத்திற் காகச் சேமிக்கின்றார்கள். அங்கே உயிர்வாழ முடியாதுள்ளது. எங் குமே சிங்களப்படைகள் வெறித் தனம் புரிந்துகொண்டிருக்கின்றன. மக்கள் காடுகளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஊருக்குள் இருப்பவர்கள் ஒவ்வொரு இரவும் கொல்லப்படுகின்றார்கள். ரயர் போட்டு எரிக்கப்படுகின்றார்கள். வட தமிழீழத்திலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து உங்களது கிரா மங்களுக்குள் சிங்களப் படைகள் புகுந்தால் உங்களது சொத்து இருக்குமா? உங்களது சேமிப்பு தான் இருக்குமா? அல்லது நீங் கள்தான் உயிருடன் இருப்பதற்கு உத்தரவாதம் இருக்குமா?

வடதமிழீழத்தில் இருக்ககூடிய இன்றைய இந்தப் பாதுகாப்பான வாழ்வுக்கு என்ன காரணம்?

சிங்கள இராணுவத்தின் காருண் யமா?

அல்லது

சிறீலங்கா அரசின் கடைக்கண் வீச்சா ?

இல்லை. இல்லவே இல்லை.

எமது படைபலம் தான் காரணம். எனவே எம்மை வருத்தியாவது எமது தேசிய பலத்தை அதிகரிப் போம். அதன்மூலம் பாதுகாப்பாக, மானத்துடன் வாழ்வோம். அதற் காக உங்களது சேமிப்பின் ஒரு பகுதியை தயங்காது தமிழீழத்தின் பாதுகாப்பு நிதிக்காக ஒதுக்குங்கள்.

ஒரு பெரிய குளம் ஒன்றின் அணையில் ஏற்பட்ட திடீர் வெடிப் புக்காரணமாக குளம் உடைப் பெடுக்கப் போகின்றது என வைத் துக்கொள்வோம்.

அதை உடனடியாகவே தடுத்தாக வேண்டும். இல்லாவிடின் குளம் உடைப்பெடுக்கும் நீர் குடிமனைக் குள்ளும் பயிர்களுக்குள்ளும் நுழைந்து பேரழிவை ஏற்படுத்தப் போகின்றது. அப்பகுதிக் கிராமங் களே அழிந்துபடப் போகின்றது.

ஆனால் அதை அடைப்பதற்கு வேண்டிய வேலைகளைச் செய்யத் தேவையான உழவு இயந்திரங்கள், மண்வெட்டிகள், சாக்குகள் கைவ சம் இல்லை. இவை இப்பகுதி விவ சாயிகளிடம் இருந்து தான் சேகரிக் கப்படவேண்டும்.

பொதுவான வேண்டுகோள் விடப்படுகின்றது.

பல விவசாயிகள் தம்முடைய ஜீவனோபாயமான அக்குளத்தினது அணை இருத்தப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்து தாமாகவே விரும்பி தமது பொருட்களைக் கொடுத்துதவுகின்றனர்.

அந்தக் கிராமத்தில் இருந்த ஒரு சிலவிவசாயிகள் அத்தகைய பொருட்களை தம்மால் தரமுடி யாது என மறுக்கின்றனர். அவை தமது சொத்துக்கள் என்றும் அதை கொண்டுதான் அடுத்தமுறை தாம் பயிர்செய்ய முடியும் என்றும் வாதிடு கின்றனர்.

ஆனால் குளம் உடைப்பெடுத் தால் அவர்களது சொத்துக்கள் அவர்களிடம் இருக்கப்போவ தில்லை. அவர்கள் அடுத்தமுறை பயிர் செய்யப் போவதுமில்லை. ஏன் அவர்களே இருப்பார்களோ தெரியாது.

அதேபோலத்தான், தமிழீழவிடுத லைப் போராட்டமும். போராட்டத் தைப் பலப்படுத்தினால் மட்டும் தான்உயிர் உட்பட உங்களது சொத் துக்களைப் பாதுகாக்க முடியும்.

அப்படியில்லாமல் எனது சொத்து என்னால் போராட்டத்துக்கு எது வும் வழங்க முடியாதுஎன எல் லோரும் அடம் பிடிப்போமானால் எமது இனத்தின் வாழ்வையே எதிரியிடம் பறிகொடுத்துவிடு வோம்.

ஒருசில மக்களின் விழிப்புணர்ச்சி இன்மைக்காக எமது இனத்தையே பலிகொடுக்க நாங்கள் தயாரில்லை.

இதன் காரணமாகத்தான் வச தியிருந்தும் தரமறுப்பவர்களிடம் வற்புறுத்தியாவது போராட்ட நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை எழுகின்றது.

அப்படியாயின் இத்தகையவர் களிடம் வற்புறுத்தி மீட்பு நிதி சேகரிப்பது சரியா?

இங்கே வற்புறுத்தல் என்பது மக்கள் நலனுக்காக, தேசநலனுக் காக செய்யப்படுகின்றது என்ப தைப் புரிந்துகொள்ள வேண்டும். இது புதியதொன்றுமல்ல. சாதா ரணமாக ஒரு குடும்பத்தில், ஒரு பாடசாலையில் அவற்றின் அங்கத் தவர் நலன்கருதி இது நடைபெறு கின்றது.

மக்களின் போராட்டம் என்ற வகையில் மக்கள் நலன் கருதி அவசியம் ஏற்படும்போது அதை இங்கும் நடைமுறைப்படுத்தவேண் டிய தேவை எழுகிறது.

கண்மூடித்தனமான விமானத் தாக்குதலை எமது மக்கள்மீது எதிரி நடாத்துவானாகில் பதுங்கு குழிகளை வீடுகளிலும், பொது இடங்களிலும் அமையுங்கள் என நாம் வேண்டுகோள் விடுப்போம். நிலைமையை உணர்ந்து வேண்டு கோளை நடைமுறைப்படுத்தாத இடங்களில் பதுங்கு குழிகளை அமையுங்கள் என வற்புறுத்துவது தவறா?

இதனால் பயன்பெறப்போவது மக்கள்தானே!

இல்லாவிட்டால் பாதிக்கப்படப் போவதும் மக்கள்தானே!

இது ஒரு புறம் இருக்கட்டும், வசதியிருந்தும் மீட்பு நிதியைச் செலுத்தாது விட்டவர்களது செய லினால்தான் இத்தகைய வற்பு றுத்தலை மேற்கொள்ளவேண்டிய நிலை எமக்கும் ஏற்படுகின்றது.

இதை ஒரு பலாத்காரச் செய லாகக் கருதமுடியாது. ஏனென் றால் பிள்ளைகளை நல்வழிப் படுத்த முயலும் பெற்றோர் பிள்ளைகள் மீது பலாத்காரம் புரிகின்றார்களா?

மாணவர்களுக்கு கல்வியையும், ஒழுக்கத்தையும் போதிக்கும் அதி பர், ஆசிரியர்கள் மாணவர்கள் மீது பலாத்காரத்தைப் பிரயோகிக் கின்றார்களா ?

ஒட்டுமொத்த மக்கள் நலனுக் காக, நாட்டின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு பொது நடைமுறைக்குள் பிடிவாத மாக வரமறுப்பவர்களை வற் புறுத்தியாவது கொண்டுவர வேண் டியது தவிர்க்கமுடியாதது.

உலக நாடுகள் எல்லா வற்றிலும் கூட ஒரு தேசிய நெருக்கடி அந்நாட்டில் ஏற்படும் போதுதேச நலன் கருதி வற்புறுத் தல்கள் நிகழ்வது வழமை.

போர் நெருக்கடி ஏற்படும்போது கட்டாய இராணுவச் சேர்ப்பு நடப்பதும், கட்டாய இராணுவ நிதி அறவிடுவதும் வழமை. அதை அந்நாட்டு மக்கள் ஒரு மக்கள் விரோதச் செயல் எனப் பார்க்க வில்லை.

அமெரிக்காவின் பிரபல குத்துச் சண்டைவீரர் முகமது அலியையே கட்டாய இராணுவசேவையில் சேரமறுத்ததற்காக. அந்நாட்டு அரசு சிறைவைத்திருந்தது

( 12ஆம் பக்கம் பார்க்க )

# ஆனையிறவுத்தளத்தில் நெருக்கடி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதையூடு விநியோகங்களை அனுப்புவது.

எமது அனுமதியின்றி இதை அமுல்படுத்த வேண்டுமாயின் 90 கி. மீ. நீளமான பிரதான பாதையை சிங்களப்படைகள் தமது பூரணகட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும்.

இது நடக்கவே முடியாத காரியம்.

தனது ஆள்பலம் முழுவதையும் பயன்படுத்தினாலும் கூட சிங்களப்படைகளால் இதைச் செய்ய முடியாது

இரண்டாவது பாதை.

வெற்றிலைக்கேணியிலிருந்து விநியோகங்களை அனுப்புவது.

தற்போதைய நிலையில் இப்பகுதியை போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாது. அண்மைய நாட்களில் பெய்த பெருமழை வெற்றிலைக்கேணியிலிருந்து - ஆனையிறவுவரையுள்ள பகுதிகளை வெள்ளக் காடாக்கியுள்ளது. மாரிகாலத்தில் இப்பகுதியில் வாகனப் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாது. கோடைகாலம் வரும்வரை அப்பகுதியில் நீர் நிறைந்தே காணப்படும். நீர் வற்றினாலும் கூட வாகனம் மூலம் பயணம் செய்ய பல வாரங்கள் எடுக்கும். அப்படியாயின் தலைச்சுமையாக தண்ணீருக்கால் விநியோகங்களை அனுப்ப வேண்டும். 1500ற்கும் மேற்பட்ட இராணுவத்தினருக்குத் தேவையான உணவிலிருந்து அதைச் சமைப்பதற்குத் தேவையான விறகுகள்வரை எல்லாவற்றையும் தலைச் சுமையாகக் கொண்டு சென்று சேர்ப்பது இலகுவான விடயமல்ல. அப்படி தலைச் சுமையுடன் நடக்க முயன்றால் இராணுவத்தினரது உயிர்களை மூட்டைகட்டி அவர்களது தலையிலேயே புலிகள் சுமக்கவைத்து விடுவார்கள் என்பது சாதாரண இராணுவ வீரன் ஒருவனுக்கே தெரியும்.

ஆகவே இராணுவபலத்தைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு தரைப்பாதையைத் தானும் திறப்பது தற்போதைய நிலையில் சாத்தியமற்றது.

இந்நிலையில் வேறுசில தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி ஆனையிறவு பிரதான பாதையைத்திறப்பதற்குரிய '' சூழ் நிலையை '' தோற்றுவிக்க சிறீலங்கா அரசு தீர்மானித்தது.

குடாநாட்டு மக்கள் மீதும், புலிகள் மீதும் ஒரு பெரிய உணவு நெருக்கடியைச் சுமத்துவதன் மூலம் தாங்கள் விரும்பிய சூழ்நிலையை உருவாக்கலாம் என சிங்கள அரசியல்வாதிகள் கருதினர்.

குடாநாட்டு மக்களின் உணவு ஆயுதமயமாக்கப்பட்டது,

குடாநாட்டு மக்களுக்கான உணவுவரத்தானது கேரதீவு-சங்குப்பிட்டி பாதைவழியே தான் நடைபெற்றுவந்தது. இதைத்தடுக்க ஒரு இராணுவ நடவடிக்கையை சிங்கள அரசு எடுத்தது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் சிங்கள அரசு நடாத்திய இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கங்களுள் இதுவுமொன்று.

இதன்மூலம் குடாநாட்டில் உருவாகியிருக்கும் உணவு நெருக்கடியைப் பயன்படுத்தி தனது பிரச்சார சாதனங்கள் மூலம் மக்களை பயமுறுத்தியும், ஆசைகாட்டியும் ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்த முயலுகின்றது.

'' குடாநாட்டு மக்களின் நன்மைக்காக'' எனப்பாசாங்கு செய்தபடி பாதையைத் திறப்பதற்குரிய அனுமதியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் எம்மிடமும் விடுத்தது.

முதலில் பாதையைத் திறந்து, அதன்பின் பேரம்பேசி அல்லது நிபந்தனைகளை விதித்து அப்பாதை மூலமே தளத்தின் தேவைகளை நிறைவேற்றி ஆனையிறவுத் தளத்தை நெருக்கடி நிலைக்குள் இருந்து மீட்க சிறீலங்கா அரசு பிரயத்தனப் படுகின்றது.

ஆனையிறவுத்தளம் சந்திக்கும் நெருக்கடிகளையும் அதைத்தீர்க்க சிறீலங்கா அரசு எடுக்கும் தந்திரோபாய நகர்வுகளையும் எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிரியின் இத்தந்திரோபாயத்தை முறியடித்து மேன்மேலும் ஆனையிறவு தளத்துக்கு நெருக்கடிகளைக் கொடுக்க வேண்டுமாயின் எமது மக்களும், நாமும் சில சிரமங்களுக்கும் சில நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

தற்காலிகமாக எமது மக்கள் சந்திக்கும்இச்சிரமங்களும் நெருக்கடிகளுமதான் நாளாவட்டத்தில் பாரிய பலன்களைக் கொடுக்கும், இது போராட்ட வாழ்வில் நாம் கண்ட அனுபவம்.

## ஏன் புதைக்கின்றோம்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கவேண்டும் என்பது சாதாரண போர்த்தர்மம். ஆனால் அதை சிங்கள இராணுவம் கடைப்பிடிக்கும் என உறுதி கூறமுடியாதுதான்.

ஆக்கிரமிப்பு இராணுவமாக இங்கு செயற்பட்டு அதனால் கொல்லப்பட்ட இந்திய ஜவான்களுக்காக இந்திய அரசு எமது மண்ணிலேயே அமைத்த நினைவுச் சின்னங்களை இந்தியப்படைகள் வெளியேற்றப்பட்ட பின்பும் கூட நாம் உடைத்தெறியவில்லை என்பதை இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

ஆனால் எமது மண்ணில் எமது போராளிகளுக்கு எமது மக்கள் அமைத்த நினைவுத் தூண்களையும், கல்லறைகளையும் சிங்கள இராணுவம் உடைத்தெறிவதையிட்டு நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. வேண்டுமானால் அதையிட்டு சிங்கள இனம் வெட்கப்படட்டும்.

இறுதியாக ஒன்று சொல்கின்றோம், முழுமையாகவே எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது தாய்மண்ணை விடுவிக்கும் போரில் வீரமரணமடையும் ஒரு வீரவேங்கை கேட்பது ஆறு அடி நிலத்தை மட்டுமே

## மண்மீட்பு நிதி

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நாம் அப்படியொரு நிலைக்குக் கூடச் செல்லவில்லை

எமது மக்கள் பிரிவினரில் ஒரு பகுதியினரின் ஒத்துழைப்பின்மை காரணமாக மீட்புநிதிதொடர்பாக சில கண்டிப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைக்குள் இருக்கின்றோம். இதை எமது மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இதனை ஒரு மனித உரிமை மீறல் நடவடிக்கையெனக் கருதக் கூடாது. ஏனெனில் ஒரு பொது இலட்சியத்திற்காக, பொதுமக்களின்சுபீட்சத்திற்காக சில விடயங்களில் கண்டிப்பாக இருப்பது தவிர்க்க முடியாதது மட்டுமல்ல தேவையானதுமாகும்.

முடிவு உன்னதமான இலட்சியமாக இருக்குமானால் அதனை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளும் வழிமுறைகள் இறுதியில் நீதி என ஒப்புக்கொள்ளப்படும்.

இது நடைமுறை உண்மை.

யாழ். மாவட்டத்தில் சுமார் இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் குடும்பங்கள்இருக்கின்றன. இதில் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் குடும்பங்களை வசதியற்றவர்களாகக் கருதினோம். மிகுதி ஒரு இலட்சம் குடும்பங்களைத்தான் நாம் மீட்பு நிதியைப் பெறுவதற்கெனத் தேர்ந்தெடுத்தோம்.

ஆனாலும் இவர்களில் சிலரது தேசபக்தியற்ற செயல்களினால் நாம் வற்புறுத்தலைப் பயன்படுத்த வேண்டி வந்துவிட்டது. வற்புறுத்தல்களினால், ஒருசில வசதியற்றவர்களும் பாதிக்கப்படக்கூடிய நிலைமைஏற்படுவதை நாம் உணராமல் இல்லை.

இவ்வாறான சம்பவங்கள் நடந்தால், விடயத்தை அறிந்தவுடனேயே சம்பந்தப்பட்டவர்களை நாமாகவே அணுகி அவர்களை மீட்புநிதி செலுத்துவதிலிருந்து, விடுவித்துவிடுகின்றோம்.

# தலைவரின் மாவீரர் நாள் செய்தி

[ 1 ஆம் பக்கத் தொடர்ச்சி ]

புயலாக எழுந்த இந்தப் பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர் கொள்ள இரும்பை ஒத்த மன உறுதி தேவைப்பட்டது. இத்தச் சோதனைமிகுந்த நெருக்கடியான - வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக, மனித மலைகளாக உறுதியோடு நின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது - சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன.

எமது போராட்டம் எத்தனையோ சவால்களுக்கு ஈடு கொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வெற்றி நடை போட முடிந்தது என்றால், அதற்கான அடிப்படைக் காரணம் எமது இலட்சிய உறுதி தான், என்பதை நான் திட்டவட்டமாகக் கூறுவேன். நீண்ட வரலாற்று அனுபவத்தில் - நான் கண்டு உணர்ந்த உண்மை இது.

ஒரு விடுதலைப் போராட்டம் பல சூறாவழிகளைச் சந்திக்கின்றது பல நெருக்கடிகளை எதிர் கொள்கின்றது. கொந்தளிப்பான பல சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்கின்றது. விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் ஒரு ரணகளம். சாவையும், அழிவையும், துன்பத்தையும் பரிசாகக் கொடுத்துத்தான் நாம் சுதந்திரம் எனும் சுவர்க்கத்தை காண முடியும். கரடு முரடான பாதைகள் நிறைந்த இந்த இலட்சியப் பயணத்தில் எமக்கு ஒரேயொரு ஊன்றுகோலாக இருப்பது, எமது உறுதி தான்.

இன்று ஒரு புதிய நெருக்கடியான வரலாற்றுத் திருப்பத்தை நாம் சந்தித்து நிற்கின்றோம.

எதிரிப்படைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்றுகையிட்டு நிற்கின்றன. பொருளாதாரத் தடைகளை இறுக்கி உணவுப் பஞ்சத்தை உண்டு பண்ண எதிரி முனைகின்றான். இராணுவ அழுத்தம் பொருளாதார நெருக்குதல் என்ற ரீதியில் இரு முனைகளில் எமது மக்கள் மீது யுத்தம் ஒன்று ஏவப்பட்டிருக்கின்றது. எமது போராட்டத்தின் அசைக்க முடியாத அரணாக நிற்கும் எமது மக்களின் மனோபலத்தை உடைத்துவிட எதிரியானவன் எல்லாவித தந்திரோபாயங்களையும் கடைப்பிடிக்கலாம் - என்பது எமக்குத் தெரியாதது அல்ல,

எமது மக்கள் சிங்கள இனவாத அடக்குமுறையின் அக்கினிப் பட்டறையில் புடம் போடப்பட்டவர்கள். அரச பயங்கரவாதத்தின் அகோரங்களை சந்தித்தவர்கள். துன்பச் சிலுவையை சதா சுமந்து பழகியவர்கள், மரணத்தின் நிழலில் படுத்துறங்கி வாழ்பவர்கள்.

களைத்துப் போனவனின் இறுதி ஆயுதமாக உணவுப்போர் எமது மக்களின் மீது தொடுக்கப்படலாம். பட்டினித் தீயால் மக்களின் மன உறுதியைச் சுட்டெரிக்க எதிரி முயற்சிக்கலாம், ஆனால் சுதந்திரப் பசியில் உறுதி பூண்ட மக்களை சோற்றுப் பசி தீண்டிவிடப்போவதில்லை.

எனது அன்பார்ந்த மக்களே !

இன்று நாம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்த சவாலுக்கும் நாம முகம் கொடுக்க தயாராக இருக்க வேண்டும்.

எமது மன உறுதிக்கு எதிரி சவால் விடுகின்றான். இந்தச் சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை.

சிங்கள அரசானது ஒரு புறம் போர்க் கொடியை உயர்த்திக் கொண்டு, மறுபுறம் சமாதானச் சமிக்கைகளைக் காட்டுகின்றது.

நாம் சமாதானத்திற்கும் தயார், போருக்கும் தயார். நாம் சமாதானத்தின் வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதனை எதிரிதான் தீர்மானிக்க வேண்டும்.

நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்து விட்டிருக்கின்றோம். சமாதான வழிமுறையின் சமரசப் பேச்சுக்களை நடத்த நாம் தயார்.

எந்தவித அழுத்தங்களுமின்றி, எந்தவித ஆதிக்கமுமின்றி சமத்துவத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில், நிபந்தனையின்றிப் பேச்சுக்களில் பங்குகொள்ளநாம் என்றும்தயார்.

எமது கொள்கையை, எமது நிலைப்பாட்டை, எமது தேசிய போராட்டத்திற்கு ஆதாரமான அடிப்படைகளை, சிங்கள அரசிற்கும உலகிற்கும் எடுத்து விளக்க பேச்சு வார்த்தைகள் வாய்ப்பளிக்கும்.

நாம் இனத்துவேசிகள் அல்லர். போர் வெறி கொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டை கௌரவிக்கின்றோம். சிங்களமக்களின் தேசிய வாழ்வில். அவர்களது சுதந்திரத்தில் நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை.

நாம் எமது வரலாற்று தாயகத்தில் ஒரு ''தேசியமக்களினம்'' என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம், எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள் என்பதுதான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாசை இந்த நியாயமான, நீதியான, நாகரீகமான எமது மக்களின் வேண்டுகோளை சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுதுதான் ஒரு நிரந்தர சமாதானமும், தீர்வும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

இராணுவ அடக்குமுறை என்ற அணுகுமுறைமூலம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. என்பதை சிங்கள அரசு இன்னும் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இராணுவ மேலாதிக்கத்தை எட்டிப் பிடிக்க வேண்டும், தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க வேண்டும், என்ற ஆதிக்க வெறி இன்னும் சிங்கள ஆளும் வர்க்கத்திடமிருந்து அகன்று போனதாகத் தெரியவில்லை.

இராணுவ ஆதிக்கத்திற்கும் அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததேயில்லை. கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்தது இல்லை. எமது இயக்கத்தின் இந்த உறுதிப்பாட்டை உலகத்தின் மிகப் பெரிய இராணுவமே பரீட்சித்துப் பார்த்து தோல்வி கண்டது. சிங்கள இராணுவமும் இந்த வரலாற்றுத் தவறை சந்திக்கத்தான் நேரிடும்

எமது அன்பார்ந்த மக்களே,

நீண்ட விடுதலைப் பயணத்தில் சோர்வுகள். எம்மை ஆட் கொள்ளலாம், போராட்ட வாழ்வின் பெரும் சுமைகள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம். மேலும் பழுக்கள் எம்மீது சுமத்தப்படலாம்,

ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு, உறுதிகொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் - எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடியாது.

வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

இன்று எமது மாவீரர்களின் கல்லறைகளிலிருந்து ஒலிக்கும் சுதந்திர கீதமும் உறுதியின் உன்னதத்தைத்தான் பாடுகின்றது.

வணக்கம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**